Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது மாசி 27 ஆம் நாள் ஷவ்வால் 14 (11-3-63) திங்கட்கிழமை இதழ் 31

# ‘மந்திரிகளுக்கு கறுப்பு கொடியா பிரச்னை?’

## சமஷ்டிக்கட்சி பற்றி கெனமன் கண்டனம்

## நேற்றைய கம்யூனிஸ்ட் மகாநாட்டு சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

“எண்ணெய்க் கம்பெனி சம்பந்தமாக அமெரிக்க நிர்ப்பந்தத்துக்கு, இலங்கை தலைவணங்கக்கூடாது. அமெரிக்க அரசாங்கம், இலங்கைக்கு அளிக்கும் உதவியை ஒரு அரசியல் ஆயுதமாகப் பாவித்து, நாட்டின் சுதந்திரத்தைப் பயமுறுத்திவருகிறது” எவீ கம்யூனிஸ்ட் தலைவர் திரு. பீட்டர் கெனமன் எம். பி. நேற்றுமாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் வாலிபர் பொதுக்கூட்டத்தில் பேசும்பொது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் மாநகர மண்டப வாசலில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு கோட்டை மைதானத்தை வந்தடைந்தது. மங்கள இசையுடனும் கோஷங்களுடனும் புறப்பட்டு பல வீதிகளிலும் அணி வகுத்து வந்த செங்கொடி ஊர்வலம் பிரமாண்டமாக காட்சியளித்தது.

திரு. கெனமன் தொடர்ந்து பேசும்போது, அமெரிக்க பயமுறுத்தலுக்கெதிராக இலங்கையின் சுதந்திரத்தைக் காப்பாற்ற இடதுசாரிக் கட்சிகள் ஐக்கியமாகச் செயல்படுகின்றன. இந்த ஐக்கியம் நீடித்த ஒரு ஐக்கியமாக மாறி இதர முன்னேற்றத் திட்டங்களுக்கும் வழி வகுக்கும் என நம்புகிறேன். ஐக்கிய தேசியக் கட்சியும், சமஷ்டிக்சட்சியும் அமெரிக்க உதவி நிறுத்தம் பற்றி மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம், தாங்கள் இலங்கையருக்கு விரோதமாக ஏகாதிபத்திய வாதிகளைப் பாதுகாக்கும் கட்சிகள் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

சமஷ்டிக்கட்சியோ தனது அரசியல் ஞானசூன்யத்தின் காரணமாக, மந்திரிகளுக்குக் கறுப்புகொடி காட்டுவதா, கறுப்புக்குடை காட்டுவதா என்ற பிரச்னையிலேயே மூழ்கியிருக்கிறது” என்றும் கூறினர்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளன பொதுக் காரியதரிசி திரு. நா. சண்முகதாசன் பேசுகையில் கூறியதாவது:

‘யாழ்ப்பாணத் தமிழ் மக்களுடைய முன்னேற்றம் தமிழ்த் தலைவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது அவர்கள் மக்களுடைய பிரச்சனைகளை தீர்க்க

(8ம் பக்கம் பார்க்க)

## ‘மனிதனுள்ளவரை கம்யூனிஸம் அழியாது’

— வி. பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், திங்கள்

“இன்றுள்ள மக்களுக்குச் சரியான வழி காட்டக்கூடியது சோஷலிஸப் பாதையேயாகும். மனிதவர்க்கமுள்ளவரை கம்யூனிசத்தை அழித்துவிட முடியாது. கம்யூனிசத்தை அழிக்க எடுக்கும் முயற்சிகள பலற்றன வாகவே முடியும்” என்று திரு. வ. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நேற்றுக் காலை கம்யூனிஸ்ட் முற்போக்கு வாலிபர் சம்மேளன மகாநாட்டின் காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

### நேரடிப் பேச்சு தீர்வு காணும்

திரு. ஐ. ஆர். அரியரத்தினம் வாழ்த்துரை வழங்குகையில் கூறியதாவது:-

நெருக்கடி மிகுந்த சூழ்நிலைமையில் நாம் வாழ்கின்றோம். சுதந்திரம் பெற்று 15 ஆண்டுகளாகியும் நாம் எதுவித முன்னேற்றமும் அடையவில்லை. எமது நாடு ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார பிடியிலிருந்து விடுபடவில்லை. இந்நிலைமை நீடிக்கும் வரை நமது நாட்டுப் பொருளாதாரம்வளர முடியாது. பொருளாதாரத்தில் அடிப்படையான திட்டங்கள் மாற்றப்பட வேண்டும். தேசியமயம் இதற்குச் சிறந்த வழி. தொழிலாளர்களும் மக்களும் ஒன்றுபட்டு ஸ்தாபன ரீதியாக முனைந்தால் தான் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய முடியும் பொருளாதார மாற்றத்திற்கு மக்கள் ஒற்றுமை அவசியமானது.

சத்தியாக்கிரகம் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. மேலே வளர்க்கவே வகை செய்யும். சமாதானமான நேரடிப்பேச்சு வார்த்தையே பிரச்னைகளுக்குத் தீர்வுகாணச் செய்யும்.

யாழ்நகரமண்டபம் செங்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் பலபாகங்களிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவந்திருந்தனர். சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொண்டனர். சிங்களப் பெண்மணிகளும் இம்மகாநாட்டில் பங்கு பற்றினர்.

காலஞ்சென்ற திருவாளர்கள் பொன் கந்தையா, இராமசாமி, ஜீவானந்தம் ஆகிய கம்யூனிஸ்ட் பிரமுகர்களை நினைவு

(5-ம் பக்கம் பார்க்க)

பரிதாப சம்பவம்

## அன்னையுடன் அருமை குழந்தைகள் மூவர் பலி!

### குடும்பத் தகராறில் பொலிடோல் குறுக்கிட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

குடும்பத்தகராறு காரணமாகஒருதாயும், அவரது 3 குழந்தைகளும் பொலிடோலுக்குப் பலியான பரிதாப சம்பவம் ஒன்று நேற்று மண்டைதீவில் நடைபெற்றது.

பொன்னம்பலம் நடனசபாபதி என்பவரின் மனைவியான 33 வயதுள்ள சிவபாக்கியம், அவரது பிள்ளைகள் சத்தியபாமா (10 வயது), பரிமளம் (8 வயது), கருணாநிதி (6 வயது) ஆகியோரே மரணமடைந்தவர்களாவர். ருத்ரா என்ற 3வயது ஆண்குழந்தை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக சிவபாக்கியம் கால் மைல் தூரத்துக்கப்பாலுள்ள தமது தந்தையின் வீட்டில் 4 பிள்ளைகளுடன் போயிருந்தார் என்றும், தனது கணவன் தன்னை வந்து அழைத்துக்கொண்டு போகாது காலங்கடத்தியது காரணமாக, மனமுடைந்து பொலிடோலை அருந்தியதுடன், 3 குழந்தைகளுக்கும் அதைப் பருக்கியதாகவும் அறியப்படுகிறது கடைசிக் குழந்தை ருத்திராவின் தலைக்கு மேலாகவே நச்சுத்திராவகம் பட்டிருப்பதாயும் ஆனல் வாய்க்குள் செல்லவில்லை என்றும் வைத்திய சோதனையில் தெரியவந்தது. தாயும், 3 குழந்தைகளும் ஸ்தலத்திலேயே உடனடியாக மரணமடைந்தனர். 4-வது குழந்தை ருத்ரா இப்போது சுகமடைந்துவருவதாய் அறிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற ஸ்தலத்தில் மண்டைதீவு கிராமாதிகாரி திரு. என், நவரத்னராஜா பூர்வாங்க விசாரணை நடத்தியபின், யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ சுப்ரிண்டன் திரு. எ, எஸ மரியநாயகம் தமது கோஷ்டியுடன் சென்று விசாரணை நடத்தினர்.

இன்று காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் விசாரணை நடைபெறும்.

## யாழ்ப்பாண சைவ பரிபாலன சபை 75-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண சைவ பரிபாலனசபை, ‘இந்து சாதனம்’ ‘இந்து ஆர்கன்’ பத்திரிகைகளின் 75-வது ஆண்டுவிழாவை வருகிற ஏப்ரல் மாதம் தக்கபடி கொண்டாட, நேற்று நாவலர் மண்டபத்தில், நிர்வாகசபையினர் கூடி இதற்காக இரு கமிட்டிகளை நியமித்தனர்.

வேறு சில முக்கிய விஷயங்களும்சபையில் ஆலோசிக்கப்பட்டன.

——

டமாஸ்கஸ், மார்ச் 10

ஸிரியாவில் இதுவரை 150 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். ஸிரியாவின் முன்னாள் அதிபர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். புதிய ஸிரியா அரசாங்கத்துக்கு குவாய்த் அங்கீகாரம் அளித்திருக்கிறது.

## நேபாள பிரதிநிதி திரும்புகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

நேபாள அரசாங்கத்தின் பிரதிநிதி திரு. வி. பி. கொய்ருல தமது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று தாயகம் திரும்பவிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்து நேபாளப் பிரதிநிதி தென்மராட்சிப் பகுதியிலுள்ள கரம்பைக் குறிச்சி, நாவற்காடு கைதடி ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். கிராம முன்னேற்றச் சங்கங்களின் ஆக்கவேலைகளையும் எதிர்காலத் திட்டத்தையும் கண்டறிந்தார்.

——

யாழ்ப்பாணம், திங்கள்

வைத்தீஸ்வர வித்தியாலய மைதானத்தில் யாழ் றேஞ்சர்ஸ்க்கும்சென் நீக்கிலஸ்கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் சென்நீக்கிலஸ் 2 - 1 கோல்களால்வெற்றியீட்டியது.

## வரி விளம்பரம்

### தேவை

சீமெந்து பைக்கெற் பேப்பர்கள் தேவை. இருப்பு உள்ளவர்கள் அறிவிக்கவும். நேரில் வந்து எடுத்துக்கொள்வோம். மில்க்வைற் தொழிற்சாலை, 527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 747

ரசாயன, புகையிலை பசளை, வெண்காயப் பசளை, மரக்கறிப் பசளை முதலியன கிடைக்குமிடம்: Farm House, Chavakachcheri. பாம் ஹவுஸ், சாவகச்சேரி. 754.

### தேவை

ஊதுபத்தி உற்பத்தி செய்ய 20 பெண்கள் தேவை. பயிற்சியும் அளிக்கப்படும். 18-3-63க்குள் விண்ணப்பிக்க.
வலி.மேற்கு கூட்டுறவுச் சங்கம்,
சங்கானை.
755

### மனேஜர் தேவை

துன்னாலை வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைக்கு மனேஜராகக்கடமையாற்ற ஒருவர் தேவை.

விண்ணப்பிப்பவர் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவராயும் ஐக்கிய பயிற்சிக்கலாசாலைப் பயிற்சிபெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

பிணைப்பணம் ரூ 1000 உம் ரூ. 4000 க்குக் குறையாத ஆதனமும் சமர்ப்பிக்கவேண்டும்.
சம்பளவிகிதம்: 1080—1800. / 15—48

விண்ணப்பங்களை இம்மாதம் 20-ம் திகதிக்குப் பிந்தாமல் சங்கத்தலைவருக்கு அனுப்பவும்.

வே. க. வல்லிபுரம்
கௌரவ காரியதரிசி.

துன்னாலைவடக்கு,
கரவெட்டி.
759

### விற்பனைக்கு

கொழும்புத்துறை புங்கங்குள வீதியில் மின்சாரநிலையத்துக்கு அருகாமையில் மூன்று பரப்பு குடியிருக்கும் காணி விற்பனைக்குண்டு. விபரங்கள் உபதபாலகந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.
756

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## அரசாங்க எம்.பி. க்கள் கோருவர்

கொழும்பு, ஞாயிறு

இம்மாதம் 19-ம் திகதி அரசாங்க பார்லிமெண்டரிக் குழு மீண்டும் கூடும்பொழுது, அரசாங்கக்கட்சியைச்சேர்ந்த எம். பி. க்கள் எண்ணெய் இறக்குமதி உச்சவரம்பு நிர்ணயவிலை சம்பந்தமாக முழு அறிக்கை வெளியிடும்படி அரசாங்கத்தைக் கேட்பார்கள் எனத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் எம். பி. க்களில், திரு. ஜி.ஜே. குணசேகரா, ஷெல்டன் ரணசேகரா, டி. பி. ஆர். வீரசேகரா ஆகியோரும் இருப்பார்கள்.

இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன், திறைசேரி, எண்ணெய்க் கம்பெனிகள் ஆகியவைகள் வெளியிட்ட புள்ளிவிபரங்கள் மாறுபட்டவைகளாக விருப்பது சம்பந்தமாக அறிவதற்கு இந்த எம். பி. க்கள் விரும்புவதாகத் தெரிகிறது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# நெருக்கடியிலும் புகையா?

பொது மக்கள் பிரயாணம் செய்யும் பஸ் வண்டிகளிலும், மோட்டார் வான்களிலும் பிரயாணம் செய்வோரும், குறிப்பாக அவற்றில் கடமை செய்வோரும் பீடி, சிகரட், சுருட்டுப் போன்றவற்றைப் புகைத்தும், வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக்கொண்டும். பிரயாணிகளுக்கும், பாதசாரிகளுக்கும் பெரும் இடைஞ்சலகளைக் கொடுக்கிறார்கள். இது ஓர் அருவருப்பான—சுகாதாரத்திற்கு ஊறு செய்யும் செயலாகும்.

வாகனங்களில் பிரயாணம் செய்யும் பொழுது புகைப்பதால் ஏற்படும் துர்நாற்றமும் புகையும் மூக்கைத்துளைத்து கண்கலங்கச் செய்து திணறடிக்க வைக்கின்றது. அல்லாமலும் புகைப்பதன் மூலம் அவற்றிலிருந்து தீப்பொறிகள் பிரயாணிகள் உடுப்பிலும், உடலிலும் பட்டு ஆபத்து ஏற்படுவதாயிருக்கின்றது.

இப்படிப் புகைப்பவர்கள் தங்களுக்குள் ஏதோ பெரிய கௌரவம் என்று நினைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு ஆத்திரமூட்டக் கூடியளவிற்கு நெருக்கமான பிரயாணத்தினூடே புகுந்து விடுகிறார்கள். பிரயாண நேரத்தில் புகைத்துக்கொண்டு பிரயாணம் செய்வதை முற்றாகத்தவிர்ப்பது, புகைப்பவருக்கு மட்டுமல்ல பிரயாணிகளுக்கும் மிகவும் நன்மையைக் கொடுக்கும். பிரயாண நேரத்தில் புகைப்பதால் என்ன நன்மை ஏற்படுகிறது? பெட்ரோல், டீசல் போன்றஎண்ணெய்வகையுடன் நாம் சம்பந்தப்பட்டிருக்கும் பொழுது புகைப்பதால் எவ்வளவு ஆபததை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

வாகனங்களில் பிரயாணம் செய்யும் பொழுது மட்டுமல்ல சினிமாத் தியேட்டர்களிலும், நாடகக் கொட்டகைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் புகையிரதத்திலும் ஒரே புகை மண்டலமாகத்தான் இருக்கிறது. நெருக்கமாக மக்கள் கூடிநிற்கும் இடங்களில் புகைத்துவிட்டு நெருப்பை அணையாமல் போட்டு விடுகிறார்கள் சிலர். இதுமிகவும் முட்டாள்தனமான செய்கையாகும். புகைப்பதால் நாமே நமக்கு நோயையும், துன்பத்தையும் ஏற்படுத்திக் கொள்வதுமல்லாமல் மற்றவர்களுக்கும் தொல்லை கொடுக்கின்றோம். அடிக்கடி புகைப்பதால் நமக்கு இருமல், புற்றுநோய் போன்ற அபாயமான, மரணத்தை விளைவிக்கக் கூடிய பிணிகள் ஏற்படுவதை இப் புகைமன்னர்கள் உணர்வதில்லைப்போலும்!

பிரயாணம்செய்யும் பொழுது பீடி, சுருட்டுப் புகைத்தால் பிரயாணிகள் தலை 'கிறுகிறுத்து' வாந்தி எடுக்கும் நிலை ஏற்படுகிறது. அதுவும் புதியதாகப் பிரயாணம் செய்வோர் நிலை அதைவிட மோசமானதாகும்.

•

வெற்றிலை குதப்புவோரின் தொந்தரவு முன்னதைவிட இரட்டிப்பு உபத்திரவமாகும். இவர்கள் வாய் நிறைய அடைசிக் கொண்டு பிரயாணம் செய்யும் பொழுது சும்மா இருப்பதில்லை. மற்றவர்களுடன் சம்பாஷிப்பதும், வெளியில் அடிக்கடி துப்புவதும் தான் இவர்களின் வேலை. இப்படிச் செய்வதால் சக பிரயாணிகளின் மேல் 'பெயின்ட்' பண்ணியமாதிரி கறை படிந்து உடுப்புகள் பழுதடைந்து போகின்றன.

சினிமாத் தியேட்டர்களிலும் கூட்டங்களிலும் இவ் வெற்றிலை மன்னர்கள் தாங்கள் இருக்கும் இடத்தின் முன்னால் 'பொழிச்' என எச்சிலை உமிழ்ந்து விடுகிறார்கள். இது பெரிய அநியாயம். திரும்பவும் அவற்றால் நடந்து செல்பவர்களுக்கோ, இருப்பவர்களுக்கோ மிகவும் தொந்தரவைக் கொடுத்து விடுகிறது. இதை அறிந்து 'ஏன் அப்பா இப்படிச் செய்தாய்? சற்ற நகர்ந்து, அப்புறம் துப்பக் கூடாது?' என்று கேட்டால், 'நீர் யார் இதைக் கேட்க? இது உன் சொத்தா? பொது இடம்தானே' என்று 'ஏனோ தானோ' என்று எரிந்து விழுகிறார்கள். இவர்கள் கொஞ்சம் கூட உணர்வதாக இல்லை. பொது இடங்களில் புகைத்தல், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல் போன்ற அசம்பாவிதமான செய்கைகள்நடத்தல் கூடாது. இதனால் வாந்தி, பேதி, சீதபேதி, க்ஷயரோகம் போன்ற அபாய கரமான நோய்கள் நம்மை அணுகும் என்று பத்திரிகைகளிலும், சுகாதாரப் பகுதியினரால் விளம்பரங்களிலும், துண்டுப்பிரசுரங்களிலும் பொறிக்கப்பட்டு இலவசமாக விநியோகித்து வந்ததையும் இதுவரை பொது மக்கள அவதானியாது அசட்டை பண்ணிவருவதை இச்செய்கை எடுத்துக்காட்டுகிறது. இனிமேலாவது புகைப்பிரியர்களும், வெற்றிலைமன்னர்களும்பொதுமக்களின் நன்மையைக் கருதியும், கொடிய நோய்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும், இவ்வித தீய செய்கைகளைக் கைவிட்டு நன்மை செய்வதல் முன்மாதிரி நின்று சேவை செய்வார்களாக!

வி. மாணிக்கம்
யாழ்ப்பாணம்

•

## யாழ்ப்பாண மாநகரசபை கவனிக்குமா?

நாவாந்துறை சென். நிக்லஸ் தேவாலய பின் ஒழுங்கையில் உள்ள வீதியில் உள்ள கிணற்று நீரை வெளியே விட்டதினால், அந் நீர் போகும் வழியில்லாமல் பாதையோரம் தேங்கி நிற்கின்றது. நாள் பட்டதினால் இது துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது. அந்த இடம் மழைகாலங்களில் அவ் வழியால் பாதரட்சையின்றி கால்நடையாகச் செல்பவர்களுக்கு பெரும் தீங்கை விளைவித்து வருகிறது. அந் நீரை வெளியே விட்டவர்கள் தங்களது கழிவு நீர்களையும், கழிவுப்பொருட்களையும் அங்கு தேங்கி நிற்கும் நீரிலேயே கொட்டி விடுகிறார்கள். இதனால் அந் நீரில் இருந்து இன்னும் கூடுதலான வியாதிகள் பரவ ஏதுவாக இருக்கின்றது. இதைப்பற்றி யாழ்ப்பாண மாநகரசபையும் சுகாதார அதிகாரிகளும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

அவ்விடத்தில் இருந்து சிறிது தூரம் சென்றால் மாடு வெட்டுபவர்கள் வசிக்கும் இடமாகி அது காட்சியளிக்கிறது. அவ் வீதியில் பாதையின் குறுக்கே ஒரு வாய்க்கால் வெட்டியிருக்கிறார்கள். அவ் வாய்க்கால் வழியாக மாமிச இரத்தமும் மிருக மலசலங்களும் வெளியே வந்து அதற்கு முன் உள்ள நிலத்தில் பரவி விடுகின்றன. அவ்விடம் சக்கடையிலும் மோசமான நிலையில் இருக்கிறது.

இவ்விடத்தில் யாழ்ப்பாண மாநகரசபை கல்லுப் போட்டுச் செப்பனிட மாநகர ஊழியர்களை அனுப்பி இருந்தது. ஆனால் அவ்விடத்திலுள்ள நிலையைக் கண்டதும் தங்களது வேலையை நெருப்பின் மேல்நின்றுதுடிப்பர்களைப் போல, ஒரு விநாடியும் நிற்க மனமில்லாமல் அலங்கோலமான நிலையில் சரிவரச் செப்பனிடாமல் செய்து முடித்துள்ளாகள்ர்.

இவ் விடத்தின் சூழலை பற்றி யாழ்ப்பாண மாநகரசபை அறிந்து இருந்தும் இதற்கான நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

எஸ். பி. தங்கராசா
நாவாந்துறை
யாழ்ப்பபணம்.

# சிறுபான்மைத் தமிழருக்கு தகுந்த பிரதிநிதித்துவம்

## ஸ்தலஸ்தாபன சேவை கமிஷனரை மாநகரசபை கேட்டுக்கொள்ளும்

யாழ்ப்பாணம், திங்கள்

சிறுபான்மைத் தமிழருக்கும் ஏனைய சிறுபான்மையினருக்கும் தகுந்த பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியதாக உள்ளூராட்சி ஆணையாளரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று மாநகரசபைக் கூட்டத்தில் விவாதிக்கபடவிருக்கிறது.

திரு என். டி. செல்லத்துரை இதுசம்பந்தமாக மாநகரசபைக்கு பிரேரணை ஒன்றினை முன்னறிவித்தல் செய்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவிருந்த பிரேரணைகள் நேரம் போதாமையால் அடுத்த வெள்ளிக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. அப்பிரேரணை வருமாறு:

மாநகரசபை வட்டாரங்களின் தொகையை அதிகரித்த போது சிறுபான்மைத் தமிழருக்கு பிரதிநிதித்துவம் வழங்க வசதி செய்ய உள்ளூராட்சி அமைச்சர் தவறிவிட்டதற்காக வருத்தம் தெரிவிக்கும் இச் சபை சிறுபான்மைத் தமிழருக்கும் ஏனைய சிறுபான்மையோருக்கும் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி உள்ளூராட்சி அமைச்சரை நிர்ப்பந்திக்கும்படி பிரதமமந்திரியைக் கேட்டுக் கொள்கின்றது.

மேலும் இதுவிஷயமாக சென்ற மாதக் கூட்டத்தில் சபையில் நிறைவேறிய தீர்மானத்தின்படி சிறுபான்மைத் தமிழர் இரண்டாயிரத்துக்குக் குறைவாக இருப்பினும் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

யாழ்ப்பாணத்திற்குரிய பெண் சுகாதார அதிகாரியின் பதவியை ஒழிக்க வேண்டாமென கௌரவ சுகாதார அமைச்சரை இச்சபை கேட்டுக் கொள்கின்றது என்னும் தீர்மானத்றை திரு. எம்.ஜேக்கப் பிரேரிக்கவிருக்கிறார்.

# மகளிர் மகா வித்தியாலயமாக்குக'

## பெற்றோர் ஆசிரிய சங்கக்கூட்டத்தில் தீர்மானம்

உடுப்பிட்டி, ஞாயிறு

"ஆசிரியருக்குக் கடமையுணர்ச்சி மிகவும் அவசியமாகும். கல்வி கற்கும் குழந்தைகள் எல்லாம் எங்களது சொந்தக் குழந்தைகள்; இது எங்கள் புனிதமான கடமை என்ற முழுமனப்பான்மையுடன் ஆசிரியர்கள் வேலைசெய்யாவிட்டால், எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் கல்வித் தரத்தில் விழிப்பு ஏற்படாது."

கரவெட்டி சரஸ்வதி வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற பெற்றார் ஆசிரிய சங்கக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலையின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காகக்கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்கு ஆசிரியர்கள் அனைவரும் சமுகந் தந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அரசாங்கம் தமிழ் மக்களின் பொருளாதார பலத்தைத் திட்டமிட்டு நசுக்கும் இந்நேரத்தில் சமூகப் பணியாளர்களாகிய நாங்களும், ஆசிரியர்களாகிய நீங்களும் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் கல்வியின் தராதரத்தைக் கூட்ட இதய சுத்தியுடன் முயற்சிக்க வேண்டும்."

பின்வரும் இரு தீர்மானங்களும் சபையோரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கரவெட்டியிலுள்ள ஒரேயொரு மகளிர் பாடசாலை என்ற முறையில் இப்பாடசாலையை ஒரு மகளிர் மஹா வித்தியாலயமாக்குமாறு வடபிரதேச உதவி வித்தியாதிபதியையும், கல்விப்பகுதியையும், உடுப்பிட்டி எம். பி. யையும் கேட்டுக் கொள்வது.

வாழ்க்கைக்குத் தேவையான கல்வி என்ற அடிப்படையில் ஒரு பன்னவேலை ஆசிரியையையும், இசை,நடன ஆசிரியர்களையும் உடனடியாக நியமித்துத் தருமாறு வடபிரதேசக் கல்வி அதிபரைக் கேட்டுக்கொள்வது.

## 'தெரிவுக் கமிட்டி வேண்டும்'

### —டாக்டர் என். எம்.

கொழும்பு, ஞாயிறு

டாக்டர் கருணரத்ன, டாக்டர் ஏ. டி. எஸ. போல், டாக்டர் ரென்சி பீரிஸ், ஜி. என். பெரேரா விவகாரம் சம்பந்தமாக முழு விசாரணை செய்யும் பொருட்டு ஜனப்பிரதிநிதிகள் சபை தெரிவுக் கமிட்டியொன்றை நியமிக்க வேண்டுமென்று கோரும் பிரேரணையொன்றை லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டுவருவார்.

மூன்று நிபுணர்களுக்கும் எதிராகவுள்ள குற்றச்சாட்டுகள் எந்தவிதமான முறையில் கையாளப்பட்டிருக்கிறதென்றும், சுகாதார சேவைகள் டைரக்டருக்கு எதிராகவுள்ள பதில் குற்றச்சாட்டுகள் எந்தவிதமானமுறையில்கையாளப்பட்டிருக்கிறது என்றும், இந்த விவகாரத்தில் நிரந்தரப் பிரதிநிதி, மற்றும் அமைச்சு, இலாகா அதிகாரிகள் எந்த விதமான பங்குகொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவுக் கமிட்டி முழு விசாரணை செய்ய வேண்டுமென்று டாக்டர் என். எம். பெரேரா விரும்புகிறார் எனத் தெரிகிறது.

இந்த முழு விவகாரத்தையும் எந்தவிதமான முறையில் பொதுச் சேவைக் கமிஷன் நடத்தியதென்றும் தாம் அறிய விரும்புவதாகவும் டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனப்பிரதிநிதிகள் சபை தெரிவுக் கமிட்டி நியமனம் சம்பந்தமான தமது பிரேரணையை, டாக்டர் என். எம். பெரேரா சபை சபாநாயகருக்கு ஏற்கெனவே அனுப்பிவிட்டார் என்றும் தெரிகிறது.

# சிரியாவில் அல்பிட்டா

## தலைமையில் மந்திரிசபை

### எல்லைகள் திறக்கப்பட்டன

டமாஸ்காஸ், பெப். 10

**நேற்று சிரியாவில் நடைபெற்ற இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து இன்று புதிய மந்திரிசபையொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமமந்திரியாகபாட்கட்சித் தலைவர் திரு. சலாஅல்பிட்டா நியமிக்கப்பட்டுள்ளார்.**

புதிய மந்திரிசபையின் பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. சலாஅல்பிட்டா சிரியா ஐக்கியஅரபுக்குடியரசுடன் இணைந்திருந்தபோது ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கத்தில் கலாச்சார மந்தியாக பணியாற்றிவந்தார்.

புரட்சியைத் தொடர்ந்து அமுல் செய்யப்பட்டிருந்த 24 மணித்தியால ஊரடங்குச் சட்டம் இன்று சிறிது தளர்த்தப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கும், அரசியல் தலைவர்களின் உருவப்படங்களை எடுத்துச் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து மூடப்பட்டதுறைமுகங்கள், விமானநிலையங்கள், எல்லைகள் யாவும் மீண்டும் திறக்கப்பட்டுவிட்டன.

ஐக்கிய அரபுக்குடியரசு, ஈராக், யேமன், ஜோர்டான், அல்ஜீரியா ஆகிய நாடுகளும் புதிய சிரிய அரசாங்கத்தை அங்கீகரித்துள்ளன.

## ஆப்கன் பிரதமர் ராஜினுமா

காபூல், மார்ச் 10

ஆப்கானிஸ்தான் பிரதமர் சர் தார்கான் பிரதமர் பதவியிலிருந்து ராஜினுமாச் செய்துவிட்டதாககவும் அவரது ராஜினுமாவை மன்னர் ஏற்றுக்கொண்டு விட்டதாகவும் அறிவிக்கப் டுகிறது. புதிய மந்திரிசபை நியமிமிக்கப்படும்வரை தொடர்ந்து பதவியிலிருக்குமாறு அவரை மன்னர் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒன்பது வருடங்களாக ஜனப்கான் பிரதமராகப் பணியாற்றி வந்துள்ளார். சரங்க மந்திரியை புதிய மந்திரிசபை அமைக்குமாறு மன்னர் கேட்டுள்ளார்.

# சிங்களதகுதிப்பரீட்சை

## டிசம்பர் மாதத்துக்குள் சித்திபெறவேண்டும்

கொழும்பு, ஞாயிறு

1956-ம் ஆண்டுக்கு முன்னர் சேவையில் இருந்தவர்கள் எனக் கருதப்படும் அரசாங்க ஊழியர்கள், இவ் வருடம் டிசம்பர் மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்திபெற வேண்டுமென்று திறைசேரி அறிவித்துள்ளது.

திறைசேரி அனுப்பியுள்ள ஒரு சுற்றுநிருபத்தில் 1956-ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவையில் இருந்தவர்கள் எனக் கருதப்படுபவர்கள், குறிப்பிட்டகால எல்லைக்குள் சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்திபெருவிட்டால் அவர்கள் சம்பள உயர்வு பெறுவதற்கு தகுதியுடையவர்களாகக்கணிக்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

நேற்று வெளியான திறைசேரியின் சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

குறிப்பிட்ட ஒருகால எல்லைக்குள் சிங்களம் தகுதிப் பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் நியமனம் பெற்றவர்கள் அக்கால எல்லைக்குள் சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தால், சம்பள உயர்வு பெறவும் உத்தியோக உயர்வு பெறவும் தகுதியுடையவர்களாகக் கணிக்கப்படுவார்கள்.

1956-ம் ஆண்டுக்கு முன்னர் சேவையில் இருந்தவர்கள் எனக் கருதப்படும் அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்திபெற்றிருந்தால் அவர்களுக்கு 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து புதிய நியமனங்கள் வழங்கப்படும்.

# 'நட்புக் காட்டினுல் பகைமை காட்டுகிருர்கள்'

### சீன,பாகிஸ்தான்பற்றி பிரதமர்நேருகருத்து

அமிர்தசரஸ், மார்ச் 10

"ஆசியாவின் அமைதியை மட்டுமல்ல, ஆசியாவின் வருங்கால முன்னேற்றமும் இணைந்திருப்பது சீன-இந்தியத் தகராறு" என்று பிரதமர் நேரு பஞ்சாப்பில் ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"சீனர்கள் திபெத்தில் தங்களது துருப்புக்களைக் கொண்டு வந்து குவித்துள்ளனர். எந்த நேரத்திலும் அவர்கள் மீண்டும் தாக்குதல் ஆரம்பிக்கக் கூடும். சீனவுடன் உள்ள போராட்டம் இப்போதைக்கு முடிவடையக்கூடியதல்ல. அது நீண்ட காலப் போராட்டமாக இருக்கும். எதற்கும் நாம் நம்மைத் தயார் செய்துகொண்டு உஷாராக இருக்கவேண்டும்'' என்று பிரதமர் நேரு கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

சமாதானமே எங்கள் நோக்கம். சமாதானத்தைக் கடைப்பிடிப்பதென்றுல் ஆக்கிரமிப்புக்குப் பணிந்துவிட்டுக் கொடுப்பதென்று அர்த்தமல்ல ஆக்கிரமிப்புகளுக்கு பணியமாட்டோம்.

எல்லைத் தகராறுக்குச் சமரசத் தீர்வு காணுமுகமாகக் கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகளை சீன ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுச்கு உத்தரவு பிறப்பிக்க அது விரும்புகிறது. அதற்கு கர்வம் அதிகரித்துவிட்டது. அதற்கு நெருங்கிய நேசநாடான சோவியத் யூனியனுடன் கூட அது பண்பற்ற முறையில் நடந்து கொள்கிறது."

பிரதமர் நேரு மேலும் பேசுகையில் சீனவுடனும் பாகிஸ்தானுடனும் இந்தியா நட்பு மனப்பான்மையைக் காட்டக் காட்ட அந்த நாடுகள் இரண்டும் பகைமை மனப்பான்மையையே காட்டிவருகின்றன வென்றுர்.

காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியா தொடர்ந்து முயற்சி செய்யுமென்றும் அதற்கு ஒருபோதும் இந்தியா தடையாகஇருக்கமாட்டாதென்றும்கூறியபிரதமர்எந்தத்தீர்வுக்காகவும் தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்கமாட்டாதென்றும் கூறினர்.

## ஊமை பேசினுர்

மாஸ்கோ, மார்ச் 10

16 வருட காலம் ஊமையாகவிருந்த ஒருவரை, சோவியத் சார்ஜன் ஒருவர் பேச வைத்துள்ளார்.

உக்ரேன் கிராமம் ஒன்றைச் சேர்ந்த இவான்லுகோவ்ஸ்கி சிறுவனகவிருந்த பொழுது, ஒரு விபத்துக்குள்ளாகி தொண்டையில் காயமேற்பட்டது. இதனுல் நசுங்கிப்போன தொண்டைக் குழாயின் ஒரு பகுதியை டாக்டர்கள் வெட்டி எடுக்க நேர்ந்தது. மூச்சுவிடுவதற்காக மட்டும் ஒரு குழாய் பொருத்தப்பட்டது. சார்ஜன் குருலின் பிளாஸ்டிக் தகடுகள் மூலம் ஒரு புதிய தொண்டைக்குளாயை அமைத்தார். ஒரு வருடம் சிகிச்சை நடைபெற்றது. இவான் குரல் பெற்று கிராமம் திரும்பினுர்.

**ஆசிரியருக்குக் கடிதம்**

## திபெத்தில் சீனர் கொடுமை

### தலாய்லாமா அறிக்கை

புதுடில்லி, மார்ச் 10

தலாய்லாமா நேற்று விடுத்த அறிக்கையில் திபெத்திலிருந்து வெளியேறிச் சென்றுவிடுமாறு சீனர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

திபெத்தில் சீன அதிகாரிகள் கொடூரமாக நடந்துகொள்கிருர்களென்றும், ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்து வருகிருர்களென்றும் தலாய்லாமா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். புனிதஸ்தலங்களை அடித்துடைத்து நாசமாக்கிவிட்டனரென்றும் திபெத்தில் பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடுவதாகவும் சீனரின் பயங்கர நடவடிக்கைகளிலிருந்து தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தினமும் பெருந்தொகையான மக்கள் அண்டைநாடுகளுக்கு ஒளித்து ஓடுகிருர்களென்றும் தலாய்லாமா கூறுகிருர்.

## கியூபாவிலிருக்கும் சோவியத் துருப்பினர்

மாஸ்கோ, மார்ச் 9

கியூபாவிலிருந்து துருப்பினரை விலக்கும் திட்டத்தை சோவியத் யூனியன் நிறைவேற்றி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

மார்ச் 15-ம் திகதிக்குள் கியூபாவிலிருந்து பல்லாயிரக்கணக்கான துருப்பினர் விலக்கப்படுவர் என்று சோவியத் யூனியன் முன்னர் அறிவித்திருந்ததென்றும் இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படுகிறதென்றும் சோவியத் யூனியன் அறிவித்துள்ளது.

## அலிசாப்ரியை தூதர் சந்தித்தார்

கொய்ரோ, மார்ச் 10

கொய்ரோவிலுள்ள இந்தியஸ்தானிகர் நேற்று ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரியைச் சந்தித்துப் பேசினுர்.

## மந்திரிகள் சந்திக்கலாம்

### மலேசியா பற்றி மகப்பகல் யோசனை

மணிலா, மார்ச் 10

மலேசியா சம்மேளனம் அழைப்பு சம்பந்தமாகத்தோன்றியுள்ள பிரச்னைக்கு சுமூகத் தீர்வுகாணு முகமாக இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மலாயா ஆகிய நாடுகளுக்கிடையில், மந்திரிகள் கட்டத்தில் முதலில் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாமென்றும் இது பயனளித்தால் பின்னர் மூன்று நாடுகளின் தலைவர்களும் சந்தித்துப் பேசலாமென்று பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி மகப்பகல் யோசனை தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோவுடனும் மலாயா உதவிப் பிரதமர் அப்துல்ரஸாக்குடனும் பேச்சுவார்த்தை நடத்திய போதே பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி இந்த யோசனையைத் தெரிவித்தார்.

## கல்கத்தா பேச்சு

### சாஸ்திரி கருத்து

புதுடில்லி, மார்ச் 10

சீனவுடன் எல்லை ஒப்பந்தம் செய்து கொண்டதன்மூலம் சூழ்நிலை பாதகமானபோதிலும், சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்துக்குத் துரதிர்ஷ்டவசமாக இச்சமயத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டபோதிலும் கல்கத்தாவில் இம்மாதம் 12-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் இந்திய-பாகிஸ்தான் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா முழுமனத்துடன் கலந்துகொள்ளும் என்று உள்விவகாரமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி கூறினர்.

கல்கத்தா பேச்சுவார்த்தைகளில் இந்தியா கலந்துகொள்ளுமென்று தெரிவித்த திரு. சாஸ்திரி காஷ்மீர் பிரச்னைக்கு நியாயமான கௌரவமான தீர்வு காண்பதற்கு இந்தியா தொடர்ந்து முயற்சி செய்யுமென்று கூறினர்.

## சிங்களம் படித்த தமிழ் ஊழியர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஐந்தாம் வகுப்பு சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்து, இப்பொழுது தென் மாகாணத்தில் வேலைசெய்யும் 25 தமிழ் அரசாங்க ஊழியர்கள் இம்மாத பிற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனத் தெரிகிறது.

# பொருளாதார விருத்தியில் கூட்டுறவு இயக்கம்

## புதிய பாலத் திறப்புவிழாவில் வட்டுக்கோட்டை எம். பி. யோசனை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"கூட்டுறவு வளர்ச்சிக்கு நிர்வாகிகளிடத்து நேர்மை, நம்பிக்கை, சேவை மனப்பான்மையும் அங்கத்தவர்களிடத்து ஒற்றுமையும் அவசியமானது. நம்நாட்டில் பல கூட்டுறவுச் சங்கங்கள் சீர்கெட்டுவருகின்றன. காரணம் நேர்மை இன்மையே. காரைநகர்-தோப்புக்காடு முருகன் கூட்டுறவுச் சங்கம் முன்மாதிரியான செயல்திறம்படைத்த ஒரு சங்கமாக இயங்கிவருவது பாராட்டுதற்குரியது."

இவ்வாறு காரைநகர் புதிய பாலத் திறப்பு விழாவில் உரைநிகழ்த்திய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மராமத்துப் பகுதியாரிடமிருந்து 83,000 ரூபாய்க்கு ஒப்பந்தமாக எடுத்து கட்டிமுடிக்கப்பட்ட பாலத்தின் திறப்புவிழா சங்கத் தலைவர் திரு. குமரகுரு தலைமையில் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:-

'தன் கையே தனக்கு உதவி' என்பதை நாம் மறந்துபோகக் கூடாது. நமது பொருளாதாரத்தைப் பெருக்குவதில் நாம் கவனஞ் செலுத்தவேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் இதில் கவனஞ்செலுத்தி உழைக்கவேண்டும். கூட்டுறவுப் பணியாளர் 'கடமை' என்று நினைக்காது சேவை என்று நினைத்துப் பணி புரியவேண்டும்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பொன்னுத்துரை பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு நாம் குடிசைக் கைத்தொழில்களைப் பெருக்க வேண்டும். ஆக்கபூர்வமான செயல்களில் கூட்டுறவுச் சங்கம் பணி புரிய வேண்டும். வெண்காயக் கூடைக்காக ஆறு லட்சம் ரூபாய் இந்தியாவுக்கு இலங்கைப் பணம் போகிறது. இதை நாம் தடைசெய்யவேண்டுமானுல் நம்நாட்டில் இத்தகைய கூடைகளை உற்பத்தி செய்யவேண்டும். இச்சங்கம் 'வெண்காயக் கூடை' பின்னும் முயற்சியை மேற்கொண்டால் ஆறு லட்சம் ரூபாவும் காரைநகர்-தோப்புககாட்டிலேயே தங்கிவிடும்.

மராமத்துப் பகுதி எஞ்ஜினியர் திரு. நடேசன் குத்து விளக்கேற்றிப் புதிய பாலத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சங்கத்தின் செயல் திறமையைப் பாராட்டிப் பேசினுர்.

காரைநகர் துறைமுகப் பாலத்தைத் திறந்துவைத்ததும் விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்களும் சங்க அங்கத்தவர்களும் 'கமலா தேவி' இயந்திரப் படகில் முதற் பிரயாணத்தைத் தொடக்கிவைத்தனர். இயந்திரப் படகு ஊர்காவற்றுறை கடற் கோட்டையை அடைந்ததும் அங்கு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. கடற் கோட்டை மண்டபத்தில் நடந்த இந்த உபசாரத்தில் தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு. சா. தமபையா, வட்டுக்கோட்டை எம்.பி திரு. அ அமிர்தலிங்கம், எஞ்ஜினியர் திரு. நடேசன் ஆகிய பிரமுகர்களும் கடந்துகொண்டனர்.

## பஸ் ஊழியர் புதிய இயக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பஸ் ஊழியர்களிடையே புதிய இயக்கமொன்று உருவாகியிருப்பதாகத் தெரிகிறது.

பஸ் தொழிலாளர்கள் கடந்த ஒருவார காலமாக தாம் சேவை செய்யும் பஸ்களில் குறிக்கப்பட்ட பிரயாணிகளுக்குமேல்ஏற்றி செல்வதில்லை என்று புதிய இயக்கத்தை உருவாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தப் புதிய இயக்கம் காரணமாக பஸ்வண்டிகளில் பிரயாணிகள்நெருக்கம் குறைவாக இருப்பினும், பஸ் வண்டிக்குக் காத்து நிற்போர் தொகை அதிகரித்து வருகிறது.

## பீக்கிங் பத்திரிகை சீற்றம்!

பீக்கிங், மார்ச் 10

இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி மக்களை ஏமாற்றுவதாக பீக்கிங்கிலிருந்து வெளியாகும் 'பீப்பிள்ஸ் டெய்லி' குற்றம் சாட்டியுள்ளது. டாங்கே தலைமையில் உள்ள இக் கட்சியில் உள்ள குழுவினர் நேருவின் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளித்து வருவதாகவும் அது கூறியது.

### மணி வாக்கு

சத்தியம், அஹிம்ஸை இவற்றைக் கடைப்பிடிக்காதவரை தனிப்பட்டவருக்கோ அல்லது நாடுகளுக்கோ அமைதி இருக்க முடியாதென்ற நம்பிக்கை எனக்கு வலுப்பட்டு வருகிறது. பழிக்குப்பழி வாங்கும் கொள்கை என்றும் வெற்றிபெற்றதில்லை.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tami Daily Post Box 49, 'affna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 27 உ (11-3-63)

## வாலுபோச்சு...!

'வாலு போச்சு கத்தி வந்தது டும் டும்' என்று ஒரு குரங்குக் கதையுண்டு. நடப்பு வருட வரவுசெலவுத் திட்டத்தைச் சரிக்கட்டுவதற்காக, இந்த அரசாங்கம்பலயோசனைகளையும் கூறி, அமுலுக்குக் கொண்டுவரும் சமயத்தில், எதிர்ப்புகள் கிளம்பியதும், ஒவ்வொன்றாகக் கைவிட்டு வரும் பரிதாப நிலையைக்கூறும்போது இந்தக்கதை தான் நமக்கு ஞாபகம் வருகின்றது.

இந்த வருடத்தில் உத்தேச வரவைவிட செலவு இதுவரை என்றுமில்லாதபடி அதிகரிக்கவே, இதைச் சரிக்கட்ட முதலில் விற்பனைவரி போடப்போவதாயும் அரைக்கொத்து அரிசியைக் குறைக்கப்போவதாகவும் அறிவித்தனர். விற்பனை வரியை வசூலிக்க, தக்க நிர்வாக ஒழுங்குகள் செய்யப்படாததால், இரண்டே தினங்களில் அந்த ஏற்பாட்டை வாபஸ் பெற்றனர். பின்னர் பங்கீட்டு அரிசியில் அரைக்கொத்தைக் குறைக்கப் போவதாக அறிவித்த முன்னாள் நிதி மந்திரி, தமது கட்சியிலேயே எதிர்ப்பு அதிகரிக்கவே அந்த யோசனையைக் கைவிட்டதுடன் தமது பதவியையும் விட்டு விலக நேரிட்டது.

புதிய நிதிமந்திரி, பதவிக்கு வந்ததும், நெல் உத்தரவாத விலைத்திட்டத்தில் ஒருமாறுதல் செய்யப்போவதாகவும், இதனால் 6 கோடி ரூபாய் மிச்சப்படுமென்றும் அறிவித்தார். ஆனால் வெளிமடைப் பிரதிநிதியும் மற்றொருவரும் சேர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தவே, அந்தத்திட்டமும்சென்ற வாரம் திடீரென நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு நெல் உத்தரவாத விலைத்திட்டப்படி நெல்லை விற்பவர்கள், அரிசிக் கூப்பன்களை வாபஸ் செய்ய வேண்டுமென்ற அந்தத் திட்டப்படி, அரசாங்கத்துக்கு மூன்றரைக் கோடி ரூபாய் மிச்சமேற்படுமென்று கடைசியாக அறிவிக்கப்பட்டது. இப்போது அந்தத் திட்டத்தையும் கைவிட்டு மாற்று யோசனைகளைப்பற்றி திறைசேரி யோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. யார் தலையில் புதிய பளுவு சுமருமோ தெரியவில்லை.

தமது எதிர்ப்பு இயக்கத்தைக் கண்டு இந்த அரசாங்கம் நடுங்குவதாக வெளிமடைப் பிரதிநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கின்றார். எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதை முன்னரே நன்கு யோசித்துக் கொண்டு வருவதே அரசாங்கத்தின் கடமை மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தலாகும். ஆனால் வெளிமடையாரின் எதிர்ப்புக்கு அஞ்சி ஒவ்வொரு திட்டத்தையும் அரசாங்கம் திடீர் திடீரெனக் கைவிடுவதாயின், அது அரசாங்கத்தின் கௌரவத்தை உயர்த்த உதவாது. நிர்வாகத்தையும் அரசாங்கம் சீராக நடத்திச் செல்வதும் முடியாமற்போகும்.

அரிசி விலையை இடைக்கால யு. என். பி. அரசாங்கம் கொத்து 25 சதமாகக் குறைத்தது. இத்துடன் உள்நாட்டு நெல்லுக்கு புசலுக்கு 12 ரூபாய் உத்தரவாத விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. நெல்லுக்கும் அரிசிக்குமாக மொத்தம் சுமார் 40 கோடி ரூபாய் உதவிப்பணம் கொடுப்பதற்கு அரசாங்க நிதிநிலைமை இடம்தரவில்லை. இதைக் கைவிடுவதற்கான பொறுப்பை ஏற்கவும் துணிவில்லாமல் அரசாங்கம் தவிக்கின்றது.

இந்த அவல நிலையை மாற்ற அரசாங்கக் கட்சியால் முடியாவிடில்வீண் கௌரவங்களைப் பார்க்காமல், எல்லாக் கட்சியினரையும் அழைத்து, இந்த முக்கியமான தேசியப் பிரச்னைக்குத் தக்க முடிவு காண முயற்சி எடுக்க வேண்டும். கட்சிக் கௌரவத்தையும் நன்மையையும்விட, தேசநன்மை மிக முக்கியமானது. பலகட்சிகளும் சேர்ந்து தேசநன்மைக்கான முறையில் செய்யும் முடிவுகளை நாட்டின் நன்மையை முன்னிட்டு, பொதுமக்களும் ஏற்று அதற்கான தியாகம் செய்யவும் பின்வாங்கமாட்டார்கள். தேச நன்மையைக் கருதிஅரசாங்கம்முதலில் கட்சி நன்மையைத்தியாகம் செய்யத் துணியுமா என்பதே கேள்வி.

# காங்கோவின் எதிர்காலம்

ஐ. நா. செயலவையில் திரு. யு தாண்ட் மீண்டும் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஜனவரி 29-ல் நடத்திய முதலாவது பத்திரிகையாளர் மகாநாட்டில், "காங்கோவில் ஐ. நா. துருப்புக்கள் நடத்திய தீவிர ராணுவசேவைக்காலம் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டது." எனக் குறிப்பிட்டார். இருப்பினும் அமெரிக்கத் தூதர் அட்லாய் ஸ்டீவன்சன், "ஐ. நா. ராணுவ நடவடிக்கைகளின் முடிவு, காங்கோவின் பிரச்னைக்கு ஒரு வேளை இதுதான் ஆரம்பகட்டமாக இருக்கும்" என்றுரைத்தார். ஐ. நா. வின் காங்கோ நடவடிக்கைகளுக்கு திரு. யு தாண்டின் வலது கரமாகத்திகழ்பவரும், பிரசித்தி பெற்ற அமெரிக்க நீக்ரோ சமாதான காப்பாளருள், நோபல் பரிசு பெற்றிருப்பவருமான ரால் பஞ்ச் "நீங்கள் சொல்வது முற்றிலும் சரியே" என்று கூறியிருக்கிறார்.

கடாங்கா ராணுவ நடவடிக்கைகளின் முடிவு காங்கோவில் ராணுவ பிரச்னைகளின் தீர்வைத்தான் இந்த அறிக்கைகள் கூறுகின்றன.

பலகோடி டாலர் செலவில் காங்கோலியர்கள், கடாங்கியர்கள் மற்றும் இதரர்களால் சிந்தப்பட்ட இரத்தத்தினால் உருவாக்கப்பட்ட சுமுகநிலை பயனற்றதாக இருக்குமேயானால் 1960-ன் கோடை காலத்தில்நடந்த மாபெரும் எழுச்சி போன்ற செயல்களைத் தடுத்து, செல்வம் நிறைந்த காங்கோ குடியரசு ஒன்றைத் தோற்றுவிக்க வகைவேண்டும். சாத்தியமான உதவிகள் குறித்து மதிப்பீடு செய்ய அனைத்துலக நிறுவன அலுவல்களின், அமெரிக்க ராஜாங்க உதவிக் காரியதரிசி தலைமையின் கீழ் அமெரிக்க தூது கோஷ்டி காங்கோவுக்கு விஜயம்செய்தது. தொடர்ந்து நிதி உதவி செய்து சமாதானத்தைக் காப்பதற்கு ஐ. நா. இன்னும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலை அனைத்துலக தலைமை அலுவலகத்திலுள்ள சிலரது புருவத்தை நெளிக்கச் செய்தது.

ஐ. நா. வுக்கு காங்கோ நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தீர ஷோம்பேயின் பேயாட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதே என்று ஐ நா. பொருளாதாரக் கவனிப்பாளர்கள் நினைத்திருந்தனர் ஆனால் திரு. யுதாண்ட், அதிபர் கென்னடி ஆகியோருக்கு ஆச்சரியப்படும் படியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. யு தாண்டின் கருத்துக்களைப் பார்க்கும்பொழுது கடாங்காவில், டிசம்பர், ஜனவரியில் நடந்த சம்பவங்களை மீண்டும் சிந்தித்துப்பார்க்கவேண்டியதவசியமாகிறது. கடாங்காவின் விஷயத்தை ஒருமுடிவுக்குக் கொண்டுவர கிறிஸ்மஸுக்கு முன்னதாக பொருளாதார முடக்கத்தை ஏற்படுத்தி மாகாணமெங்கிலும். ஐ. நா. துருப்புகள் சுதந்திரமாய் நடமாடச் செய்ய ஐ நா. முயற்சித்தது. ஐ. நா. முஸ்தீபுகளை தகர்ப்பதற்காகவே இத்தருணத்தில் திரு சோம்பே ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார். பின்வாங்குவதற்குப் பதிலாக மேலோங்கச் செய்யாத தாக்குதல்...ஐ. நா. நடவடிக்கைகளை துரிதபபடுத்தியது, எனக் குறிப்பிட்டார் திரு. யுதாண்ட். தக்க ஆயுதங்களுடன் கூடிய 19,000 ஐ. நா. துருப்புகள் சொற்ப தேசத்துடன் 1960-ல் சாதிக்கவிருந்த செயல்களைச் சாதித்துகடாங்காவில் ராணுவ எதிர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. ஷோம்பேக்கு வரம்புக்குட்பட்ட அரசியல் வாழ்வுக்குத் தருணம் அளிப்பதற்காகவே (ஐ. நா.—அமெரிக்க தீர்மானத்திற்கேற்ப) இந்தத்துரித வெற்றிகர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என ஐ. நா. பார்வையாளர்கள் கருதுகின்றனர்

தொடர்ச்சியான எதிர்ப்பு சாஸனத்தின்மூலம் அரசுரிமையை மாற்றிக் கொடுப்பதாகவோ, அல்லது பலாத்காரமாகவோ உரிமை பறிக்கப்படலாமென்பதை மாகாண அதிபர் உணர்ந்திருந்தால், சுய பாதுகாப்புக்காகவேனும், குறிப்பாக லியபோல்ட்வில்லியிலுள்ள காங்கோலிய மத்தியஅரசாங்க தலைமைத்துவத்தின்கீழ் தொடர்ந்து தமது அதிபர் பதவி பறிபோகாமலும் பார்த்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உண்டாக்கி இருப்பார்.

இதைத்தான் இறுதியாக திரு. ஷோம்பே செய்தார். ஆத்திரவசப்பட்ட கடாங்காவின் கூலிப் பட்டாளத்துக்கு பணங்களைக் கொடுத்து தீர்த்துவிட்டு, கோல்ஸ்வெயி மற்றும் இதர இடங்களிலுள்ள மிக முக்கிய சுரங்கங்களை வெடிவைத்துதகர்ப்பதைத் தடுத்து. அவைகளை எல்லாம் லியப்போல்ட்வில்லியில் சமர்ப்பித்துவிட்டார். சிலரின் அபிப்பிராயப்படி சோம்பேயின் 'கொஞ்நஞ்ச' அரசியல் பிரசன்னம் இன்னும் அடுத்துவரும் மாதங்களில் தொந்தரவுகளைக் கொடுக்கலாம் என யூகிக்கின்றனர்.

இதன் விளைவு திரு. யு தாண்டுக்கும் கானா அதிபர் நிக்ருமாவுக்குமிடையே குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டது. சமீபகால நெருக்கடியில் முற்றிலும் மௌனம் சாதித்த சோவியத் யூனியன், ஜனவரி மாதத்தில் இஸ்வெஸ்டியா எனும் சஞ்சிகையில் "காங்கோலிய மக்களுக்கு முன்னிலையில் தாம் செய்த குற்றங்களுக்கு திரு. ஷோம்பே குற்றவாளியாக்கப்படவேண்டும்" என கோருகிறது. தற்சமயம் தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் வரையறுக்கப்பட்ட நிர்வாகத்தின் மூலம் சோம்பே திருப்தி கொள்வார் என் சிலர் நம்புகின்றனர். பிறிதொரு காலத்தில் இதைவிட விரிவான அதிகாரத்தை மத்திய அரசாங்கத்தில் பெற்று பிரதானமாக விளங்குவார் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கடாங்கா பிரளயம் ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, ஷோம்பே தனி மனிதராக்கப்பட்டது பொருளாதாரத்துறையில் சீரழிவுபெறச் செய்துவிட்டது. இரண்டரை ஆண்டுப் போராட்டம் காங்கோ கருவூலத்தை உஷ்ண நிலை அடையும்படி செய்ததுடன் 13 கோடி முப்பது லட்சம் டாலர் துண்டு விழும்படியாகிவிட்டது. எலிசபெத்வில்லிலில்,கடாங்கா வங்கியில் இருப்புக் கணக்கு எடுக்கும்பொழுது 70 சதவிகித பணம் செலவுசெய்யப்பட்டோ, அல்லது திருடப்பட்டோபோய் விட்டது. காங்கோவைப்போல் செல்வம் நிறைந்த அந்த நாடு, நிதியின்றி பொருளாதார செயல்முறைகளின்றி மலைஜாதி மக்களின் யுத்த முஸ்தீபுக்கு திரட்டலாகிக்கொண்டிருக்கிறது. மாறுபட்ட காங்கோ ஒன்று தோன்றினால், அதன் பொருட்டு விரிவான முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்பது வெளிப்படை. திரு. பஞ்ச் கூறுவதுபோன்று "மனிதவர்க்கத்தின் வரலாற்றிலே, அதிலும் முக்கியமாக ஐ. நா. வரலாற்றிலே மிக அதிகமான தொழில் நுட்ப உதவிகளுக்கு ஆயத்தமாகிக்கொள்ள வேண்டியதை இது தோற்றமளிப்பதாக" கூறுகிறார். இதைத்தான் திரு. கிளீவ்லாண்டின் சாஸனமும் கூறுகிறது. கட்டங்கா, காங்கோ பொருளாதார மேம்பாட்டிற்கு ஐ. நா. அதிக அக்கறையுடன் கவனம் செலுத்தி ஆவன நடவடிக்கைகளை திரு. யு தாண்ட் மேற்கொள்ளவேண்டும்.

மார்ச் இறுதிக்குள் 19,000 ஐ. நா துருப்புகளை 12 முதல் 13 ஆயிரமாகக் குறைக்க வேண்டியது, எதிர்கால நடவடிக்கையில் முன்னேட்டமாகத் தெரிகிறது. மேலும் அதிகமான அளவுபடை எண்ணிக்கையும் குறைக்கப்படும். அதிகமாக செலவினத்தைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. அடுத்து மே மாதத்தில் கூடவிருக்கும் விசேஷ கூட்டத் தொடரில் ஐ நா. நிதி நிலைமை நிர்ணயிக்கப்படும். இதற்கிடையில் எந்தவகையில் உதவி செய்யலாம் என்பது குறித்து அமெரிக்க ஆலோசனை செய்யும். காங்கோ, இருமுனை, அல்லது பலமுனைகளிலிருந்து தனக்கு உதவிகள் திரட்டும்என திரு. தாண்ட் கூறுகிறார். பாதுகாப்பு சபைக் கூட்ட மூலமாகவன்றி, ஐ. நா. வின் காங்கோ கட்டளையின் மாற்றங்களின் மூலமாகவன்றி, சுயமான முறையில் புதிதாக அணுகி, நிறைவேற்றப்படும். கடாங்கா ஆர்ப்பாட்டம் முடிந்ததும் அரசியல், மலைஜாதியினர், பொருளாதாரம் முதலிய பிரச்னைகள் இன்னும் காங்கோவில் மிகைப்படத்தக்கதாக காணப்படுகிறது. ஆனால் பொதுவாகப் பார்த்தால், திரு. தாண்ட் கூறுவதுபோல் மோசமான நிலைமுடிந்துவிட்டதென்று சொல்வதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சமாதானத்திற்கும், சுபிட்சத்திற்கும் முன்நோக்கிச்செல்ல காங்கோவுக்கு இறுதி உதவி தான் தேவைப்படும் என உணரப்படுகிறது.

[ஐ. எப். எஸ்.]

## ஐயாறன் எழுதுவது

பார்லிமெண்டிலே மந்திரிகள், மெம்பர்கள் மட்டுமின்றி அவர்களது மனைவிமார் பெயரும் அடிபட ஆரம்பித்துவிட்டது!

'பொய்யர்களும் முட்டாள்களும் மந்திரிகளாகவுள்ளதாக வெளிமடையார் கூறி பின்னர் உபதலைவர் கேட்டதற்காக அதை வாபஸ் பெற்றார். ஆனால் உடனே, மந்திரிகளை அதிக மோசமாகத் தாக்கினர். "புத்தி கெட்டவர்கள் இலாகாப் பொறுப்பு வகிக்கிறார்கள். தங்கள் பைகளை பத்து ரூபாய் நோட்டுகளால் நிரப்பத்தான் அவர்களுக்குத் தெரியும்" என்றதும் "என்ன சொன்னாய் திருப்பிச் சொல்லுடா" என்றாராம் வர்த்தக மந்திரி.

பேச்சு தடித்தது. ஒரு வெள்ளைக்காரருடன், மெம்பரின் மனைவி 'கலப்பு நடனம்' ஆடியதாகமந்திரிகூறவே, வெளிமடை தம்பதிகளுக்கு ஆவேசம் வந்துவிட்டது. "கலப்பு நடனமா? நான் ஆடியதில்லையே" என்று பாய்ந்தார் ஸ்ரீமதி கே. எம். பி.

"மந்திரியின் மனைவி தான் தொண்டமானிடம் இருபதினாயிரம் ரூபாய் தங்கச் சங்கிலி பெற்றார். என் மனைவி கலப்பு நடனம் ஆடியதில்லை" என்று ஒரு வெடிகுண்டு போட்டு, தம்பதிகள் இருவரும் சேர்ந்து கூச்சலிட்டு மந்திரி மீது மேலும் வசைமாரி பொழிந்தனராம்.

"உங்களைச் சொல்லவில்லை. தம்பதெனியா (ஆர். ஜீ.) யின் மனைவியைத்தான் சொன்னேன்"என்று வர்த்தக மந்திரி கூறியபின், இந்தச் சம்பவம் ஒருவிதமாக அடங்கி, அத்துடனே விவசாயிகள் கூப்பன் வாபஸ் செய்யும் திட்டமும் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டது.

கே. எம். பி. தம்பதிகளின் சக்தியே சக்தி! இவர்களிடம் தான் மந்திரிகளுக்கு எவ்வளவு பயம்! தமிழ் எம். பி.க்களில் யாருடைய மனைவியாவது ஒரு எம். பி.யாகத் தெரிவுசெய்யப்படாதது பெரிய குறையாக எனக்குப்பட்டது. இக்குறை சீக்கிரத்தில தீர வேண்டும்.

* * *

மலாயா சர்வகலாசாலையிலே இந்தியத்துறை பேராசிரியராகக் கடமையாற்றும் தனிநாயக அடிகளார், யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டொரு நாட்களில் கண்டிக்குச் செல்லுவாரென்று தெரிகிறது.

அச்சர்வகலாசாலையில் இலங்கையைச் சேர்ந்த எலியேஸர், உதவி உப அத்யட்சகராகத் தொண்டாற்றுவதாயும், மாணிக்க இடைக்காடர் கணிதப் பேராசிரியராகவுள்ளதாயும், வேறும் சில இலங்கைத தமிழர் அதில் நல்ல பணியாற்றுவதாகவும் தெரிவித்தார். சிங்கப்பூர் சர்வகலாசாலையிலும் இலங்கைத தமிழர் சிலர் பணிபுரிகின்றனராம்.

அங்குள்ள இலங்கைத் தமிழரின் நிலைமையைக் கேட்டதற்கு, வயதானவர்கள் இலங்கைதிரும்ப விரும்புவதாயும், ஆனால் இளைஞர்கள் மலாய் நாட்டுப் பிரஜைகளாகி, இலங்கையைப்பற்றிய தொடர்பு பற்றி அக்கறை காட்டுவதில்லை என்றும் தெரிவித்தார். பொதுவாக தமிழர் அங்கு அமைதியாக மற்றவருடன் சரிசமமாக வாழ்ந்துவருவதாகவும் தெரிவித்தார் அடிகள்.

* * *

கொழும்பிலே 'போனர்ஸ்' என்ற கப்பல் கட்டும் ஒரு இஞ்ஜினியரிங் கம்பெனியில், 8 வருடங்களாக வேலைபார்க்கும் ஆரியதாஸ என்ற 30 வயதுள்ள சிங்களத் தொழிலாளியை ஆயிரம் ரூபாய் சம்

(8-ம் பக்கம் பார்க்க)

# ‘ஆங்கிலத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்’

## கோப்பாய் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், ஞாயிறு ‘தமிழ்மொழிக்கு நாம் எவ்வளவு தூரம் உரிமைக்காகப் போராடுகிறோமோ அதேபோல ஆங்கில மொழிக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். எதிர்காலத்தில் மக்கள் எல்லாத் துறைகளிலும் ஆற்றல்பெற்று இருக்க வேண்டுமானல் ஆங்கிலம் அவசியம் தேவை” என்று வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி எம். தம்பையா கோப்பாய் கிறிஸ்தவகல்லூரிப் பரிசளிப்புவிழாவில் பேசுகையில் கூறினர்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிப் பரிசளிப்பு விழா நேற்றிரவு கல்லூரி அதிபர் திரு. இ. சி. ஏ. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கிய செல்வி தம்பையா மேலும் பேசியதாவது:

சேவை மனப்பான்மை ஒவ்வொருவரிடையும் இருக்க வேண்டும். சேவை மனப்பான்மையா‍ல் தான் உலகில் அமைதி நிலவ முடியும்.

கல்லூரி அதிபர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறியதாவது:

சுதந்திரம், சுயராஜ்யம் என்பது ஒரு நாட்டை ஆண்டு வந்த பிறிதொரு அரசாங்கம் அந் நாட்டை விட்டு வெளியேயேறும்போது கொடுப்பதன்று. சுதந்திரம் விலை மதிப்புள்ளது. இதனை எல்லா மக்களும் உணர்ந்தால் தான் சுதந்திரம் நிலைப்பதோடு பயனும் வளரும். சுதந்திரம்வளர கல்வி வளரும். இதனை நாமுணராவிடின் சுதந்திரத்தின் மூலமாக வேறுவித அடிமைகளாக மாறக் கூடும்.

### தமிழரின் கல்வியின் நோக்கம்

தமிழ்ப் பெற்றார் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் அதிக கவனம் எடுக்கிறார்கள் என்றதோர் அபிப்பிராயம் உண்டு. ஆனல் உண்மையில் தங்கள் சொந்த நோக்கங்களைப் பிள்ளைகள் மூலம் நிறைவேற்றும் முயற்சியாகவிருப்பதை அநேக ஆண்டுகளின் அனுபவத்தின் மூலம் சொல்லக்கூடியதாக விருக்கிறது. முதல் விட்டு அதை எவ்வளவாகப் பெருக்கிக்கொள்ள முடியுமோ அவ்வளவு பெருக்கிக்கொள்ளும் முயற்சி போன்றது அநேகருடைய கல்வியின் நோக்கம். ஆகையினலே குறுகியபான்மை எம்மை அதிகம் பீடித்துவிட்டது. கல்வியினல் என்ன உத்தியோகம் என்ன சம்பளம் என்பதே பெற்ருருடைய ஒரே நோக்கமாகையால் விஞ்ஞானத்திலும் வேறு துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள்கூட ஒரு கலாசாலையில் ஒரு உயர்ந்த பதவியைப் பெற்றுவிட்டால் போதுமென, ஒரு தேசம்விட்டு சில வேளைகளில் வேறு தேசமும் செல்கிருர்களேயொழிய ஆராச்சி முறையிலோ வேறு பொது நன்மைக்காகவோ தங்கள் கல்வியறிவை விருத்தி பண்ணுகிருர்களில்லை. பணத்தையே சேகரிப்பவராக வயதுசென்ற பொழுதும் தங்கள் பெற்றோரின் நோக்கத்தை நிறைவேற்றிய வண்ணமிருப்பவர் அனேகர். இதனல் தற்போது வேலையில்லாக் கஷ்டத்தினிமித்தம் கல்வி ஓர் போட்டிக்குரிய விஷயமாகிவிட்டது.

### 300 விஞ்ஞான தமிழ்ப் பட்டதாரிகள்

முற்காலங்களில் பரீட்சைகளில் சித்தியடையாவிட்டாலும் உத்தியோகம்பெறலாம். இப்போது 300 விஞ்ஞானத் தமிழ்ப்பட்டதாரிகள் உத்தியோகமில்லாமல் தவிக்கிருர்களென அறிகிரேும். விஞ்ஞானம் ஆசிரிய உத்யோத்திற்கும் அரசாங்க உத்தியோகத்திற்கும் மட்டும் தான் உதவியாகும் என்றெண்ணுவது தவறு. இந்த 300 பேர்களைக் கூட்டி மக்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களின் பிரயோசனத்திற்கும் ஒன்றும் செய்யமுடியாதா? பிரயத்தனம் இம்முறையில் நடந்துள்ளதா? பகிரங்கக்கூட்டங்களும் பிரேரணைகளும் பேச்சுகளும்மட்டும் மக்களின் வாழ்க்கையைத் திறப்படுத்தமாட்டாது. ஆகையினலே இதுகாறும கல்வியின் ஒரேநோக்கம் ஒவ்வொருவரும் பணம் சேகரிப்பதில் முந்திக்கொள்வதே. இதிலும் எது இலேசான வழியோ அதையே நாடிவந்தோம் கூட்டுறவுச் சங்கங்களும் பொது நலன் நோக்கிறதாகத் தெரியவில்லை.

மாணவரைப் பொருள்வருவாய்க்கென்ற நோக்கத்துடன பெற்றோர் காத்திருக்க, அரசியல் முறையென்றும் தேசிய முறையென்றும் இவர்களைத் தங்கள் கருவிகளாகப் பாவித்துக்கொள்ளக்கூடியதாக இப்பொழுது பல தருணங்கள் பலருக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றது. நிர்வாகங்களிலும் பலநிபுணர் தலைகாட்டும் காலமாகிவிட்டது. பாடசாலைகள் மூலம் தங்கள் சுயநலத்தை வளர்க்கிறதற்கென்று தேசநன்மையையும் வேறுமுன்னேற்றங்களையும் சாட்டி மாணுக்கரை அங்குமிங்கும் அலைத்து உலைத்து விடுகிருர்கள். ஆகையினல் நிதானமாகவும் பொறுப்புணர்ச்சியுடன் சுயாதீனமாகவும்சிந்திக்கும்வண்மையை இழந்துவிடுகிருர்கள். மாணவர் சங்கங்களில் தாமாக ஏதேனும் ஆராய்ச்சி செய்தோ, கற்றறிந்தோ விஷயங்களைப்பற்றிப் பேசவும்தர்க்கிக்கவும் சக்தியில்லாதவர்களாய் இருக்கிருர்கள். எல்லாரும் ஒரு புறமிருக்க நாம் ஏன் கஷ்டப்படுவான் என்று பல இடங்களிலும் பல ஆசிரியர்களும் கூறுகின்றனர்.

பெரிய தொகையுள்ள பாடசாலைகளில் இப்பேற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வது அசாத்தியம்- ஒரு அளவில் சிறிய பாடசாலைகளும் சிறிய வகுப்புக்களுமுள்ள இடங்களுமே இக்குறைகளைக் கொஞ்சமேனும் நிவர்த்தி செய்ய முடியும். எந்த விதமான கல்வியென்ருலும் சரி அது தற்கால நாகரிகத்திற்கு முரண்பட்டதாயிருந்தாலும் “குரு-சிஷயன்” என்ற ஒழுங்கு குன்றினல் வேறெதுவும் சரியாகும் என்றெண்ணுவது அபத்தம். குரு-சிஷ்ய ஒழுக்கம் மந்திரிசபைகளிளினலும் சங்கங்களிலும் சட்டங்களினலும் உண்டாக்கக் கூடியதொன்றன்று. இது அடிப்படையிலில்லாமல் விஞ்ஞான உலகமென்றும் தற்கால நாகரீகம் என்றும் பண்பாடென்றும் சொலலிச்சொல்லி மிருகங்களுக்கும் யந்திரங்களுக்கும் இடையேயுள்ள இன்னும் ஒரு சிருஷ்டியைஉண்டாக்காதுகாத்துக்கொள்வது அவசியம்.

விளையாட்டு மைதானங்கள் கட்சிப் பிளவுகளையும் தகராறுகளையும் உண்டாக்கும் நிலையங்களாகின்றன. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தோனேஷியா நடந்தது முன்மாதிரியாகவிருக்க பாடசாலை மைதானங்களில் குழப்பங்கள் ஏற்படுவது ஆச்சரியமல்ல. ஆனலும் போட்டிகளுக்கும் ஒரு நியாயமான விலையுண்டு. எல்லாவற்றையும் கொள்ளைப் பொருள் என்றுநினைப்பதேசரியான நோக்கங்களைக் குலைத்துவிடுகின்றது.

சுயமரியாதையாகச் சீவிப்பதென்றால் கொஞ்சப்பொருளையென்றலும் உற்பத்திசெய்யவும்அக்கொஞ்சப்பொருளோடு திருப்திபாகச் சீவிக்கப்பழகுதலுமே. சுயமரியாதை வெறும் பேச்சாக முடிகிறது. தேசம் முழுவதும் இலவசக்கல்வியைப் பெற்றும் இம்மாதிரியாகச் சீர்கெட்டுப்போவது எங்ஙனம்?

சுதந்திரம் அல்லது சுயராச்சியம் ஒரு தேசத்தை ஆண்டு வந்த பிறிதொரு அரசாங்கம் அத்தேசத்திற்கு அவ்விடம் விட்டு வெளியேறும்பொழுது சும்மாகொடுப்பதொன்றன்று. இதை விலையுள்ளதென்று பெற்று ஒரு தேசத்தின் சகல மக்களுக்கும் சரியாக விநியோகிப்பதிலேயே சுதந்திரம் வளரவும் அவ்வளர்ச்சியிலே அச்சுதந்திரத்திற்கேற்ற கல்வியும் வளரும். இது எல்லாருடைய நோக்கமாகவும் விடாமுயற்சியாகவும்இருக்காவிட்டால்சுதந்திரத்தின் மூலமாக வேறுவிதமான அடிமைகளுமாகிவிடலாம்.

# சேமிப்புப் பணத்தை திருப்பி எடுப்பதில் சிரமம்!

## சிங்களத்தில் மாத்திரம் பத்திரம் நிரப்பவேண்டிய நிர்ப்பந்தம்

யாழ்ப்பாணம், திங்கள் தபாற்கந்தோர்களில் சேமிப்புப் பணம் பெறுவதில் தமிழ் மக்களுக்கு புதிய கஷ்டமொன்று உருவாகியுள்ளது.

தமிழ் பேசும் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தபாற் கந்தோரில் சேமிப்புத் பத்திரம் மூலம் தமது சேமிப்பை முதலீடு செய்ய முடியும். இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கிடைக்கும். ஆனல் சேமிப்பிலிருந்து பணம் மீட்பதாயின் தமிழ் மக்கள் சிங்களம் தெரிந்தவர்களின் உதவியை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பணம் மீட்பதற்கு உறுதிப்படுத்திக் கொடுக்கப்படவேண்டிய பத்திரம் சிங்களத்தில் மட்டுமே உண்டு. தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள பதத்திரம் தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்தத் தபாற்கந்தோரிலும் பெற்றுக்கொள்ள முடியாது. பணம் சேமிப்பிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டுமாயின் தபாற் கந்தோரில் சிங்களம் தெரிந்தவர்களை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி பத்மாவதி மாரிமுத்து என்பவர் அங்குள்ள தபாற்கந்தோரில் தபால் சேப்மிபுப் பத்திரத்தில் பணம் முதலீடு செய்திருந்தார். அவசர தேவைக்காகப் பணம் எடுப்பதற்காக யாழ்ப்பாணம் தபாற் கந்தோருக்கு வந்தார். ஆனல் அங்கு பணமிருந்து 159 ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தை மீட்பதற்கு உத்தரவாதப் பத்திரத்தில் உறுதிப்படுத்தியே பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனல் அப்பத்திரம் தமிழிலும் ஆங்கிலத்திலும் கிடைக்காததால் அப்பெண்மணி கஷ்டப்பட்டார்.

“சிங்களத் தகுதிப் பரீட்சை பொது மக்களுக்கும் வேண்டுமா” என்று அங்கலாய்த்த அப்பெண்மணி நமது நிருபரிடம் நமது மொழியிலே நமது நாட்டிலே கருமமாற்ற முடியவில்லையென்றும், சிங்களம் தெரிந்த அனபரை ஆண்டவனே அனுப்பிவைக்கவேண்டும் என்றும கூறினர்.

சனிக்கிழமை நண்பகல் இச்சம்பவப் நடைபெற்றது. அரைநாள் அலுவல் நடைபெறும் தினமது. இரண்டு மணித்தியாலங்களாக திருமதி மாரிமுத்து காத்து நின்ருர் 12-45 மணியளவில் சிங்கள தகுதிப் பரீட்சைக்கு அரசினரால் அனுப்பப்பட்டவரும் தபாற் கந்தோரில் கடயையாற்றுபவருமான ஒருவர் திருமதி மாரிமுத்துவுக்கு உதவினர். சிங்கள உறுதிப் பத்திரத்தை ஆங்கிலத்தில் நிரப்பிக்கொடுத்தார்.

திருமதி மாரிமுத்து பத்திரத்தை ஒப்படைத்து, ‘மரணத்திற்கு வாரண்ட் பிறப்பிக்க கையெழுத்துப் போடுகிறேனே தெரியவில்லை. எது வரினும் வரட்டும். துரையே! பிச்சை வேண்டாம் எனது பணம் முழுவதையும் என்னிடம் ஒப்படையுங்கள்’என்று கூறி தாம் முதலீடு செய்த பணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பினர்.

---

ஜோம்யா, மார்ச் 10 நயாஸலாந்திலுள்ள எல்லா ‘பியர்’ கடைகளும் மூடப்பட்டு விடுமென்று பிரதம மந்திரி டாக்டர் ஹேஸ்டிங்கர் பண்டா, சட்டசபையில் கூறினர்.

---

# கம்யூனிஸ்ட் மகாநாடு தீர்மானங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூரும் வகையில் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

இலங்கையில் இன்று வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்துவருகிறது. இன்றைய முதலாளித்துவ அரசியலமைப்பின் கீழும், நசிந்துவரும் முதலாளித்துவ நாடுகளின் உதவிகள் மூலமோ இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. எனவே உள்நாட்டில் தேசிய செல்வங்களை அதிகரிக்கச் செய்யும் தேசிய பொருளாதாரத் திட்டம் ஒன்றை உருவாக்கி சோசலிஷ நாடுகளின் உதவியுடன் இப் பிரச்னைக்குத் தீர்வுகாண அரசாங்கம் முன்வரவேண்டுமென இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

இன்று விலைவாசிகள் அதிகரித்து, வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து வருவதால் மக்களின் வாழ்க்கைத்தரம் வரவரச் சீர்குலைந்து பொருளாதாரக் கஷ்டங்களும் அதிகரித்து வருகின்றது. எனவே பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் அந்நிய முதலீடுகளைத் தேசியமயமாக்கி உள்நாட்டுச் செல்வநிலையை அதிகரிக்கச் செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இம் மாநாடு அரசினரைக் கோருகின்றது.

இன்றைய அரசாங்கம் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் செல்லத் தயங்குவதாலும் மக்கள் மத்தியில் வரவர நெருக்கடிகள் அதிகரித்து வருவதாலும் தமிழ்மக்களின் மொழி இனப்பிரச்னைகளைச் சரியான வழியில் தீர்வுகாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததாலும் நாட்டில் ஏற்பட்டுவரும் அதிருப்தி நிலைகளைப் பாவித்து பிற்போக்குச் சக்திகள் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்ல முனைவதால் தேசிய ஐக்கியத்தையும் முற்போக்குச் சக்திகளின் ஒற்றுமையையும் கட்டிவளர்த்து இந்நாட்டில்சோசலிசசமூக அமைப்பொன்றைத் தோற்றுவிக்கும் வழியில இடதுசாரிச் சக்திகள் ஒரு பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையில் உடனடியாக ஐக்கியப்பட வேண்டுமென இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

நெற்காணிமசோதா, மக்கள் வங்கி, கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்கள் போன்ற மக்களுக்கு நன்மை பயக்கும் நிறுவனங்களைத் திறக்க விடாது தமிழரசுக்கட்சி முட்டுக்கட்டையிட்டு வருவதை இம்மகாநாடு கண்டிப்பதுடன் இலங்கை மக்களுக்கு அரசாங்கம் செய்யும் பொதுக் கடமைகளில் பாரபட்சம் காட்டாது தமிழ்ப்பகுதிகளிலும் மேற்படிஸ்தாபனங்களை தொடர்ந்துதிறப்பதற்கு ஆவன செய்யும்படி அரசாங்கத்தை இம் மகாநாடு கோருகின்றது.

கடந்த காலத்தின் சாபக்கேடாக இன்றைய தமிழர்சமுதாயத்தின முட்டுக்கட்டையாக இயங்கிவரும் சாதி ஒடுக்க முறைகள் ஒழிக்கப்பட்டு சகலருக்கும் மனிதஉரிமைகள் வழங்கப்பட வேண்டுமென தமிழ்ப் பகுதிகளிலுள்ள பலகட்சிகளும் சிலபெரியார்களும் கோரி வந்தபொழுதிலும் நிலைமைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது இன்னும் ஒடுக்க முறைகள் அதிகரித்து வருவதால் தமிழ்ப்பகுதிகளிலுள்ள சகல ஜனநாயக சக்திகள் அனைத்தும் கூட்டாகச்சேர்த்து இந்தப் பிரச்சினைக்கு ஓர் முடிவுகாணத் தம்மாலான முறையில் ஒத்துழைத்து,தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டுமென இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுவதுடன் இம்முயற்சிக்குத் தன்னுலான சகல ஒத்துழைப்பையும் நல்குவதென இம்மாகாடு தெரிவித்துக் கொள்ளுகிறது.

இலங்கை அரசாங்க நிர்வாகம் பொலிஸ், இராணுவம் போன்ற துறைகளில் செயலாற்றும் அதிகார மமதை கொண்ட விதேச உணர்ச்சியுள்ள ஊழியர்கள் தொடர்ந்தும் நட்டுக்குத் துரோகம் விளையாதிருக்க உடனடியாக இவர்களை நீக்கித் தேசிய விழிபபுணர்ச்சி கொண்ட ஊழியாகளை நியமித்து இவ்விலாக்காக்களை புனருத்தாரணம் செய்யுமாறு இம்மகாநாடு அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகின்றது.

இன்றைய கல்வித்திட்டத்தால் நாட்டிற்கோ அன்று மாணவர்க்கோ எவ்வித நன்மையுமில்லாதபடியால் அரசாங்கம் எஞ்சியிருக்கும் பாடசாலைகளையும் பொறுப்பேற்று விரிவடைந்த தேசிய பொருளாதாரத் திட்டமொன்றை உருவாககுவதுடன் சகலபாடசாலைகளிலும் விஞ்ஞானக்கல்விக்கு முகசியத்துவம் கொடுப்பதுடன் விஞ்ஞானக் கல்வி தேசிய மொழிகளிலேயே கற்பிக்கப்பட வேண்டுமென இம் மகாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழகத்தை நாம் வரவேற்பதுடன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம், வைத்தியம், தொழில்நுட்பம், கலை ஆகிய சகலதுறை கல்விகளுக்கும் இடமளிக்கப்படவேண்டுமென இம்மகாநாடு கோருவதுடன் யாழ்ப்பாணத்திலிருக்கும் தொழில் நுட்பப் பாடசாலையை தொழில்நுட்பக் கல்லூரியாக விரிவுபடுத்தும்படியும் இம்மகாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக கொள்கிறது.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சகல ஸ்தலஸ்தாபன சபைகளும், அவ்வப் பிரதேசங்களிலுள்ள வாலிபர்களுககு வசதியளிககும் வகையில் விளையாட்டு அரங்குகள் நிறுவிக கொடுப்பதுடன், சகல படமாளிகைகளிலும் சுகாதார ரீதியான சட்டதிட்டங்களை அமுல் நடத்துவதுடன் தகுந்த ஆசன வசதிகள் இடம்பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இம்மாநாடு சகலஸ்தலஸ்தாபன சபைகளையும் வேண்டிக கொள்ளுகிறது.

# "ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை மறுக்கலாகாது"

## தேசிய தமிழாசிரியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"ஆசிரியர்களுககு அரசியல் உரிமை மறுக்கப்படலாகாது" என்னும் தீர்மானமொன்றினை தேசிய தமிழாசிரியர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாண மாநகர மண்டபத்தில் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

ஆசிரியர் தராதரப் பத்திர ஆசிரியர்களுக்கு இடைக்கால அறிக்கையில் காட்டப்பட்ட 72 ரூபா முதல் 199 ரூபாவரையுமுள்ள சம்பளத்திட்டத்தை உடனடியாக அமுல் நடத்த வேண்டும்.

வருடத்தின் இடைப்பகுதியில் மாற்றம்செய்வது ஆசிரியர் மாணர் இருபகுதியினரிடையேயும் நன்மை பயக்கமுடியாது. ஆகவே ஒவ்வொரு வருடத்திலும் தை, வைகாசி மாதங்களில் இடமாற்றம் செய்வதனை தைமாதத்தில் மட்டும் எனத் திருத்தவேண்டும்.

கொழும்பில் இயங்கிவரும் மாற்றச்சபையை மத்திய மாற்றச் சபையாகக்கொண்டு பிரதேச மாற்றச்சபைகள் இயங்கவேண்டும்.

1-12-62-ல் பாடசாலைகள் யாவற்றையும் வித்தியாதிபதியின் முகாமையின்கீழ்கொண்டு வந்ததுபோல ஒரே திகதியில் அப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டதாகக் கருதி அத்திகதி தொடக்கம் சகல ஆசிரியர்களுக்கும் வீட்டுவாடகை, புகையிரதச் சீட்டு ஆதியன கொடுக்கப்படவேண்டும்.

கூட்டத்திற்கு திரு. வே. கந்தர் தலைமை வகித்தார்.

# சாதி வித்தியாசம் பாராட்டும் தேநீர்க் கடைகள்

## லைசென்ஸ் ரத்துச்செய்யும் உப விதிகளை சேர்க்கவேண்டுமென யோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தேநீர்க்கடை லைசென்ஸ விதிகளில் சாதிவித்தியாசம் பாராட்டும் கடைக்காரர்களின் லைசென்ஸை ரத்துச்செய்யும்படியான உபவிதிகளை உள்ளூர் ஆட்சி மந்திரி இயற்ற வேண்டும்"

இவ்வாறு சாதி வித்தியாச ஒழிப்புச் செயற்குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இச்செயற்குழுக் கூட்டம் செனட்டர் நல்லையா தலைமையில் நடைபெற்றது. உள்ளூராட்சி மந்திரிக்கு உபவிதிகள் தயாரிப்பது சம்பந்தமாக சிபார்சுகள் செய்வதற்காக திருவாளர்கள் செனட்டர் நல்லையா, வி. தருமலிங்கம் எம்.பி., சி. கதிரவேற்பிள்ளை ஆகியோர் கொண்ட உபகுழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

சமூக குறைபாடுகள் விலக்கும் சட்டத்திற்கு மாறாக சாதி வித்தியாசம் காட்டும் தேநீர்க் கடைச் சொந்தக்காரருக்கும், ஊழியர்களுக்கும் எதிராக வழக்குத்தொடர, சட்டஆலோசனை உதவிகள் அளிப்பது.

அண்மையில் நடந்த யாழ்ப்பாண மாநகரசபை வட்டார பிரிவில் சிறுபான்மைத் தமிழர்களுடைய கோரிக்கைகள் முற்றாக நிராகரிக்கப்பட்டு அவர்களுக்கு அநீதி இயற்றப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்து யாழ். மாநகரசபை சிறுபான்மைத் தமிழருக்கு நீதி வழங்கும் பொருட்டு புதிதாக வட்டார பிரவு நடத்தவேண்டுமென்று பிரதம மந்திரியையும் உள்ளூராட்சி மந்திரியையும் இந்த இயக்கம் கேட்டுக்கொள்கின்றது.

மரவரி முறை தொடர்ந்து இருக்கவேண்டுமென்றும். கள்ளின் உற்பத்தியும் விற்பனையும் உள்ளூராட்சி மன்றங்களின் கண்காணிப்பில் இருக்கவேண்டுமென்று சிபார்சு செய்யவும் சாட்சியம் கொடுக்கவும் ஒரு உபசபை நியமிக்கப்பட்டது.

—

# விண்ணப்ப பத்திரங்கள் இல்லை

மாவிட்டபுரம், ஞாயிறு

யாழ்ப்பாணம்வனபரிபாலன இலாகாவில் வீடுகள் கட்டுவதற்குரிய விண்ணப்ப பத்திரங்கள் இல்லாமையால் பொது மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள்.

# மேலும் ஒரு டிக்கட் மெஷின் காணவில்லை!

கொழும்பு, ஞாயிறு

காணமற்போனதாகக் கூறப்பட்ட இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான 'டிக்கட் மெஷின்கள்' இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கடந்த வாரம் மற்றுமொரு 'டிக்கட் மெஷினும்' காணமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு சி. ஐ. டி. பொலிஸ் அழைக்கப்படுவார்கள் எனத் தெரிய வருகிறது.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது மூன்று 'டிக்கட் மெஷின்' காணமற்போனது. கடந்த வாரம் நாலாவது 'டிக்கட் மெஷின்' காணமற்போனது.

காணமற்போனதாகக் கூறப்படும் 'டிக்கட் மெஷின்' வெளியிடங்களில் ஓடிய பஸ்களில் உபயோகிக்கப்பட்டதென்றும், 'டிக்கட் மெஷின்' திருட்டுகளுக்கு ஒரு குழுவினர் காரணமென்றும் கூறப்படுகிறது ஒவ்வொரு மெஷினும் 500 ரூபாய் மதிப்புள்ளதென்றும், இந்த மெஷின்கள் சம்பந்தமாகத் தகவல் கொடுப்பவர்களுக்கு 500 ரூபாய் பரிசு கொடுக்கப்படுமென்றும் இ. போ. ச. அறிவித்திருந்தது.

# பட்டினசபைக்கு தனிக்கொடி

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறைப் பட்டின சபையின் விஷேச கூட்டம் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றது. சங்கத்திற்கு ஏர், வள்ளம், தென்னை, பனை சின்னங்கள் பொறித்த கொடி அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பஸ்போக்குவரத்துச் சீர்கேட்டைக் கண்டித்தும், காங்கேசன்துறை ஆஸ்பத்திரிகள் இரண்டு காங்கேசன்துறைச்சந்தி, சிமிந்தித் தொழிற்சாலை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் பிரயாணிகள் தங்கும் நிலையங்கள் அமைக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. பட்டினசபை உபதலைவர் திரு. சு கிருபாமூர்த்தி தமது சொந்தச் செலவில் பஸ் நிலையமொன்று அமைப்பதாக உறுதியளித்தார்.

பட்டினசபை, மக்கள் வங்கிக் கிளையில் முதலாவது கணக்கு வைத்துக்கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

—

# பூநகரி பஸ்சேவை

## கிளிநொச்சி எம். பி. மாற்று யோசனை

பூநகரி, ஞாயிறு

பூநகரிக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையிலுள்ள பஸ் போக்குவரத்தை, யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவின் கீழ் கொண்டுவரும்படியும், மன்னாருக்கும் பூநகரிக்கும் இடையிலுள்ள பஸ் சேவையை கிளிநொச்சி வரை தொடர்ந்து ஓடும்படியும், கிளிநொச்சி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. சிவசுந்தரம், பஸ்டிப்போ மனேஜர்களுக்கு தந்திமூலம் அறிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

பூனகரிக்கும் சங்குப்பிட்டிக்குமிடையில் பெப். 28, மார்ச் 1-ம் திகதிகளில், பஸ்சேவை நடைபெறவில்லையென்றும், போக்குவரத்திற்கு பஸ் குறைவாக இருப்பதாகவும், அதனால் பூநகரிக்கும் சங்குப்பிட்டிக்கும் தனிபஸ் சேவை ஆரம்பிக்கும் படியும் இதனால் தற்போது 50 மைல் இடைவெளிதூரம், 15 மைலாகக் குறையுமென்று , பஸ் பழுதடைந்தால் மெக்கானிக் போய்வர இதுவசதியாக இருக்குமென்றும், அக்கோரிக்கையில் கிளிநொச்சி எம். பி. தெரிவித்துள்ளாரர்ம்.

# பொலிஸாருக்கு 'மாத அலவன்ஸ்'

## 'கசிப்பு' மன்னர்கள் கொடுக்கிறார்களாம்

கொழும்பு, [illegible]

கொழும்பு நகரில் சட்டவிரோதமாக சாராயம், 'கசிப்பு' விற்பனை செய்பவர்கள், பொலிஸாருக்கு மாத அலவன்ஸும், இலவசமாக மதுபானமும் கொடுப்பதாக மாநகர சபையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் திடீர்சோதனையின் போது அகப்படாமல் இருப்பதற்கும் பிடிபடாமல் தங்களது விற்பனையைத் தொடர்ந்து நடத்துவதற்குமாக, 'கசிப்பு' மன்னர்கள் பொலிஸாருக்கு மாத அலவன்ஸும், இலவச மதுபானமும் கொடுக்கிறார்கள் என்று மாநகரசபை அங்கத்தவர்கள தெரிவித்துள்ளனர்.

மதுபானம் விற்பதற்கான லைசென்ஸுகள் இல்லாமல், நகரத்திலுள்ள ஹோட்டல்களிலும், வடுதிகளிலும் சாராய விற்பனை செய்யப்படுகிறதென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# செய்தித்திரட்டு

## 26 1/2 வருட சேவை

திருமலை, சனி

திருக்கோணமலை சிவில் ஆஸ்பத்திரியில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றிய திரு. வி. தம்பிஐயா இப்போது ஓய்வுபெற்றுள்ளார். இவர் அப்போதிக்கரியாக 26 ½ வருடம் சேவை புரிந்தவர்.

## 'வயோதிபர் விடுதி'

திருமலை, சனி

சாம்பல் தீவுக் கிராமச்சபை அண்மையில் கூடியபோது வயோதிபர்களுக்கு ஓர் விடுதியமைப்பது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திற்கு திரு வ. நா. தம்பிராசா தலைமைதாங்கினார்.

## மக்கள் வங்கிக் கிளை

திருமலை, சனி

மக்கள் வங்கியின் கிளையொன்றை கிண்ணியாவில் திறக்க போக்குவரத்து, உணவு அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன உத்தரவிட்டுள்ளார். திருக்கோணமலையில் முதல் முதலாக திறக்கப்படும் முதல் வங்கிக் கிளை இதுவாகும்.

## சங்காபிஷேகம்

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் இம்மாதம் 13-ம் திகதி மண்டலாபிஷேகமும், சங்காபிஷேகமும் நடைபெறும். அச்சுவேலி ஸ்ரீலஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் இவ் அபிஷேகத்தில் கலந்துகொள்ளுகின்றார்.

## குரக்கன் சோழம்

உடுப்பிட்டி, சனி

"உணவுத் தட்டுப்பாட்டை மாத்திரமல்ல நோய்களைக் களைவதற்கும் குரக்கன், சோழம், சாமைபோன்ற உணவுத் தானியங்களை உற்பத்தி செய்யுங்கள். இதனால் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படாது" என்று கரவெட்டி வடக்கு இளைஞர் விவசாயச் சங்கக் கூட்டத்தில் பருத்தித்துறை மாவட்ட விவசாயப் போதனாசிரியர் திரு. வி. சத்தியநாதன் கூறினார். கரவெட்டி வடக்கு கிராமாதிகாரி திரு. எஸ். கே. சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

## உடற்பயிற்சி

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளின் இவ்வருடத்திற்கான உடற்பயிற்சிப் போட்டிகள் இம்மாதம் 6-ந் திகதி தவிர்க்கமுடியாத சில காரணங்களால் நடைபெறவில்லை. இம்மாதம் 20-ம் திகதி நடைபெறும் இப்போட்டிகள் நெல்லியடி மத்திய மஹா வித்தியாலயத்திலும் பருத்தித்துறை ஹாட்லிக கல்லூரியிலும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## கதம்ப நிகழ்ச்சி

பருத்தித்துறை, வெள்ளி

வட மராட்சிப் பகுதிக் கல்லூரிகளின் வருடாந்த கதம்ப நிகழ்ச்சிகள் இம்மாதம் 15-ம் திகதி நடைபெறவிருக்கிறது. ஆங்கில ஆசிரியர் சங்கத்தால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்படவிருக்கும் இவ்விழாவிற்கு வட பகுதி வித்தியாதிபதி திரு. எஸ். யூ சோமசேகரம் தலைமைவகிப்பார் என தெரியவருகிறது.

## உற்சவம் ஒத்திவைப்பு

மன்னார், சனி

பாலைதீவு அர்ச். அந்தோனியாரின் வருடாந்த உற்சவம், 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மன்னார் பகுதியிலிருந்தும், மற்றும் பகுதிகளிலிருந்தும், ஏராளமான யாத்திரிகர்கள் வருவதால் ஆலய நிர்வாகிகள் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறதாகத் தெரியவருகிறது.

## பிரயாணிகள் கஷ்டம்

மன்னார், சனி

மன்னாருக்கும் முருங்கனுக்கும் இடையில் உள்ள 12-ம் கட்டையடியில் சில சமயங்களில் பஸ் தரிக்காமல் சென்றுவிடுவதால் அநேகம் பிரயாணிகள், மிகவும் கஷ்டப்படுகின்றனர். இந்த இடத்திலிருந்து முருங்கன் மூன்று மைலும், உயிலங்குளம் நாலு மைலும் இருப்பதால் பிரயாணிகள் நடந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. கட்டக்காடு, வண்ணாங்குளம் முதலிய கிராமங்கள் இருக்கிறபடியால் இதில் பஸ்கள் நிற்பாட்டிப் போகவேண்டுமென்று பிரயாணிகள் கோரியுள்ளனர்.

## வெடி விபத்து

மன்னார், சனி

சமீபத்தில் நடந்த பட்டாஸ் வெடி விபத்தில், பனங்கட்டிக் கொட்டிலைச் சேர்ந்த திரு. தங்கராசா, திரு. சவிரி என்ற இளைஞர்கள் காயமடைந்தனர். திரு. தங்கராசா, ஒரு கண்ணையும், கையையும் இழந்தார். இவர்கள், அநுராதபுர ஆஸ்பத்திரிக்கும், அதன்பின் மன்னார் ஆஸ்பத்திரிக்கும் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

—

பால்சபை

# 'வெற்றுப் போத்தல்கள் கவனிக்க படுவதில்லை'

கொழும்பு, ஞாயிறு

கடந்த சில வருடங்களாக பால்சபைக்கு ஏற்பட்டுவரும் நஷ்டங்கள்குறித்துஅரசாங்கம் கவலை தெரிவித்துள்ளது.

பால்சபையின் வழக்கமான பாவனையாளர் ஒருவர் தெரிவிக்கையில், வெற்றுப் போத்தல்கள் சரியான முறையில் மீண்டும் கொண்டு செல்லப்படுவதில்லையென்றும் இதனால் பால்சபைக்கு ஒரு விதத்தில் பெரு நஷ்டம் ஏற்படும் என்றும் கூறினார்.

இது சம்பந்தமாக அவர் தெரிவித்ததாவது: "பால்சபைக்குச் சொந்தமான 156 வெற்றுப்போத்தல்கள் கொழும்பிலுள்ள ஸ்தாபனம் ஒன்றில் கடந்த ஒரு மாத காலமாக இருந்து வருகிறது. வெற்றுப் போத்தல்களை எடுத்துச் செல்லும்படி, இந்த ஸ்தாபனம் பால்சபைக்கு பல தடவைகள் கடிதத்தின் மூலமும், டெலிபோன் மூலமும் அறிவித்திருந்தது.ஆனால் இது சம்பந்தமாகப் பால்சபை அதிகாரிகள் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த வெற்றுப் போத்தல்களை எடுத்துச் செல்வதற்காக அண்மையில் பால்சபை வான் ஒன்று வந்தது. அந்த வானிலிருந்து இறங்கிய ஒருவர் இரண்டு போத்தல்களை மட்டும் எடுத்துச் சென்றார். இப்பொழுது 154 வெற்றுப் போத்தல்கள் இருக்கின்றன. இவ்வளவும் காலியாக வேண்டுமானல் குறிப்பிட்ட வானும் மற்றுமொருவரும் 77 தடவைகள் இங்கு வரவேண்டும்."

வெற்றுப்போத்தல்களை பால்சபையினர் கவனிப்பதில்லையென்றும், வெற்றுப் போத்தல்கள் திரும்பவும் எடுத்துச் செல்லப்படுவது அபூர்வம் என்றும் பலர், பால்சபைக்கு முறையிட்டுள்ளனர்.

# திருவாசகப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம் 6 பரீட்சை நிலையங்களில் நடத்திய திருவாசகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பரிசுகள் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கீழ்ப்பிரிவு

தெல்லிப்பழை பாலர்ஞானோதய சபை: நா. சிவகுமாரன், செ. ரவீந்திரன். ச. ரவினி, இ. சரோஜினிதேவி.

அளவெட்டி சதானந்தவித்தியாசாலை: கு. விக்கினேஸ்வரன், அ. சிவனேஸ்வரி, அ. சூரியகுமாரி.

மூளாய் சிவப்பிரகாசவித்தியாசாலை: கா. ஸ்ரீதேவி, க. சிவகாமசுந்தரி, நா. ஜெகதீஸ்வரி.

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சபை: சி. சிவசுப்பிரமணியம்.

இளவாலை மயிலங்கூடல் கூட்டுப்பிரார்த்தனைச் சபை: சி. சாந்தலிங்கம், க. கோபாலசிங்கம்.

கைதடி விக்கினேஸ்வரவித்தியாசாலை: த. புஷ்பராணி ச. யோகாம்பிகை.

கைதடி அ.த.க. பாடசாலை: ச. நிர்மலகுமாரி.

நுணுவில்கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை: க. தேவேந்திரா ஸ்ரீகாந்தா, செ. செந்தில்மணி.

கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலை: வே. தயாளன், மு. இரஞ்சிதம், பொ. லோகநாயகிஅம்மா, வே. திலகவதி.

கரவெட்டி சரஸ்வதி பெண்கள் பாடசாலை: சி. யோகேஸ்வரி, வே. மகேஸ்வரி, க. செல்லம்மா.

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி: த. கலாமணி.

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி: த.அரிபிரசாதம்.

யாழ். இந்துக்கல்லூரி இந்து வாலிபர் சங்கம்: க. மகேஸ்வரன்.

தட்டாதெரு இ. த. க. பாடசாலை: சி. துரைநாயகம், சி. தனநாயகம், க. திருக்குமாரி' இ. புனிதவதி, ப. சரஸ்வதி.

## மத்தியபிரிவு

ஏழாலைமேற்கு சைவசன்மார்க்கவித்தியாசாலை:அ.அருட்சக்தி, மு. கலாதேவி.

சுன்னாகம் மயிலணிச் சைவ வித்தியாசாலை:- ச. வரதராசேஸ்வரசர்மா.

தெல்லிப்பழை பாலர்ஞானோதயசபை:- கு. தவராஜசிங்கம்; ச. சரோஜினிதேவி.

அளவெட்டி சதானந்த வித்தியாசாலை:- த. கார்த்திகேசு; பொ. கனகேஸ்வரி.

அராலி தெ. மே. முருகமூர்த்தி வித்தியாசாலை:- மா. கோகுலவதி;கு. ஞானேஸ்வரி.

பண்ணாகம் வடக்கு அம்பாள் சனசமூக நிலையம் இந்து இளைஞர் இயக்கம்:- சி. ஜெயபாலன், ந. பரலச்சந்திரன்; ந, சரோசா.

கைதடி விக்னேஸ்வரவித்தியாசாலை: மு. பொன்னுப்பிள்ளை.

கைதடி அ. த.க. பாடசாலை:- ச. ஸ்காந்தவதனி; மா. பரமேஸ்வரி.

நுணுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை:- வி. சதாசிவம்; செ. ரங்கநாதன்; வி. செல்வமர்: சா. ஜெகதாம்பிகை.

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை:- வ. விமலாதேவி.

கரவெட்டி:- சரஸ்வதி பெண்கள் பாடசாலை:- க: பார்பதி; க. நீலாம்பிகை; சி. பாலாம்பிகை.

யாழ். இந்துக்கல்லூரி-இந்து வாலிபர்சங்கம்:-ஆர்.இராசலிங்கம்.

தனிப்புட்ட பரீட்சார்த்தி:- ..." பிரேமாவதி கோப்பாய்.

## மேற்பிரிவு

தெல்லிப்பழை சைவப்பிரகாசவித்தியாசலை:- கா. சிவகெங்கை.

தெல்லிப்பழை பாலர்ஞானோதய சபை:- ந. கோபாலகிருஷ்ணன்.

அளவெட்டி சதானந்த வித்தியாசாலை:- அ. திலகவதி; ச.சரஸ்வதி.

அராலி தெ. மே. முருகமூர்த்தி வித்தியாசாலை:-ந. உருக்குமணி; க. சிவஞானம்பிகை; க. தனலட்சுமி.

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சபை - வ. தருமலிங்கம்.

இளவாலை மயிலங்கூடல் கூட்டுப்பிரார்த்தனை சபை:- கா. தங்கராசா.

தனிப்பட்ட பரீட்சார்த்தி:- க. கனகராசா, கைதடி.

நுணுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை:- க. தர்மேஸ்வரி; வே. கனகாம்பிகை

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை:- ந, பரமேஸ்வரி.

கரவெட்டி சரஸ்வதி பெண்கள் பாடசாலை:- வெ. வள்ளியம்மை; க. இலட்சுமி! மு. சிவபாக்கியம்.

இந்துக் கல்லூரி இந்து வாலிபர் சங்கம்:- இ. கருணைகரன்.

---

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

### திங்கள் 11-3-63

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7 15 பேராசிரியர் ஏ. சின்னத்தம்பி-பேச்சு, 7-30 சசிலேகா பாலச்சந்திரன்-ஜலதரங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ் மூலம் சிங்களம், 9-30 தேர்ந்த இசை, 9-45 நாகேஸ்வரி பிரமானந்தா-பாட்டு.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய சங்கீதம், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 எஸ்.லக்ஷ்மிசுந்தரம்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 ஸ்வாமிமலை எஸ். ஜானகிராமன்-பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-10 எஸ். லக்ஷ்மிசுந்தரம்-பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 இலக்கியஏடு, 7-40 சர்வகலாசாயகளுக்காக விஞடி விஞ, 8-00 எமது கடமை-பேச்சு, 8-15 சென்னை அஞ்சல், 8-30 இசைக்கோவை, 9-30 தாளவாத்தியக் கச்சேரி.

# தீ வைத்ததாக தொடரப்பட்ட வழக்கு

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன் துறையைச் சேர்ந்த பூரணம் சின்னத்தம்பி என்பவரின் வீட்டுக்கு நெருப்பு வைத்து 500 ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக திருமதி சதாசிவம் மீது காங்கேசன் துறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி. டி.தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சுற்றவாளி என்று கூறினர். பூரணம் சின்னத்தம்பி, பொற்கொடி கதிரவேலு ஆகியோர் சாட்சியமளித்தனர். மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை அடுத்த மாதம் 4-ந் திகதிவரை ஒத்தி வைத்தார்.

எதிரிதரப்பில்திரு.ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர். உதவி இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா வழக்கை நடத்தினர்.

# பட்டதாரி மாணவருக்கு பகுதிநேர வேலை

## வித்தியாலங்கார பல்கலைக் கழகம் அனுமதியளிக்கும்

கொழும்பு, ஞாயிறு

வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தில் பயிலும் பட்டதாரி மாணவர்கள், பகுதிநேரவேலை செய்வதற்கு விரைவில் அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது. பட்டதாரி மாணவர்கள் தங்களுக்கு தேவையான கைச்செலவுப் பணத்தை பெறும் பொருட்டு அவர்கள் பகுதிநேர வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

வித்தியாலங்கார பல்கலைக் கழக அதிகாரிகளின் கருத்தைத் தொடர்ந்தே இப்புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் ஒருபகுதி பட்டதாரி மாணவர்கள், தங்களது கைச்செலவுக்கு பணம் பெறும் பொருட்டு தாங்கள் பகுதி நேரவேலை செய்வதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

வித்தியலங்கார வித்தியோதய பல்கலைக் கழகத்தில் பயிலும் பட்டதாரிமாணவர்களுக்கு நிதிப்பிரச்சனை உண்டென்றும் வெளியில் சென்று பகுதி நேர வேலைசெய்வதற்கு அனுமதி கோரியிருந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தில் இப்பொழுது நடைபெற்று வரும் கட்டிட வேலைகளில் எந்தவிதமான பாகுபாடுமின்றி வித்தியாலங்கார பட்டதாரி மாணவர்கள் ஈடுபடுவது சம்பந்தமாக வித்தியாலங்கார பல்கலைக் கழகம் ஆராந்துவருகிறதென்றும், பட்டதாரி மாணவர்களின் விருப்பத்திற்கிணங்கவே அவர்கள் இவ்வித வேலைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது. மேற்கு நாடுகளில் பயிலும் பட்டதாரி மாணவர்களும் இந்த விதமான வேலைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.




கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/T/6/113

# மொழி உரிமை அறிக்கை

## வெளியிடுமாறு பிரதமருக்கு கடிதம்

கொழும்பு, ஞாயிறு

**தமிழ்ப்பேசும் மக்களின் மொழியுரிமை சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் திருமதி சிறிமாபண்டாரநாயக்கா நியமித்த இரு குழுக்களும் தங்களது அறிக்கையைச் சிலமாதங்களுக்கு முன்னதாகவே பிரதமரிடம் சமர்ப்பித்துவிட்டதாக அறியப்படுகிறது.**

இந்த அறிக்கைகளை வெளியிடுமாறு கோரி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதமருக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ்மொழி உரிமைக்காகத் தமிழ்பேசும் மக்கள் 1961 ஆம் ஆண்டில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தை அவசரகால நிலைமையைப் பிரகடனஞ்செய்து இராணுவத்தால் அடக்கியபின் பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமிழ்பேசும் மக்களின் மொழி உரிமையைப்பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இரு குழுக்களை நியமித்தார்.

இக்குழுக்களில் ஒன்று அரசாங்க உத்தியோகத்தர் சிலரைக் கொண்டது. இக்குழுவின் தலைவர் (இப்பொழுது நீதியரசர்) திரு. ஏ. டபிள்யு. எச். அபயசுந்தரா 8-6-61 இல் பத்திரிகைகளில் வெளியிட்ட அறிவித்தலில் உத்தியோக மொழிச் சட்டத்தாலும், தமிழ் மொழி (விசேஷ விதிகள்) சட்டத்தாலும் தோன்றியுள்ள நிர்வாகப் பிரச்னைகளையும், மக்களுக்கு உண்டான இடர்ப்பாடுகளையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமது குழுவைப் பிரதமமந்திரி நியமித்துளர் எனக்குறிப்பிட்டார். இக்குழு சில மாதங்களில் தனது அறிக்கையைப் பிரதமரிடம் சமர்ப்பித்தது.

மற்றைய குழு, கொழும்பிலுள்ள தமிழ்ப் பிரமுகர்களைக் கொண்டதெனவும், இக்குழுவில் செனெட்டர் எஸ். நடேசன், திருவாளர்கள் க. சோமசுந்தரம், ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசுவாமி முதலானோர் கடமையாற்றினர் எனவும், இக்குழுவின் அறிக்கையினைத் திரு. க. சோமசுந்தரம் அவர்கள் பிரதமரிடம் சமர்ப்பித்தார் எனவும் அறியப்படுகிறது.

இவ்விரு குழுக்களும் தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்துப் பல மாதங்களாகியும் பிரதமமந்திரி இவற்றை இன்னும் வெளியிடவுமில்லை, இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்து தமிழ்மொழி உரிமைகளை நல்குதற்கு எவ்வித நடவடிக்கையினையும் எடுக்கவுமில்லை. இன்னும் காலம்தாழ்த்தாமல் இந்த இரு அறிக்கைகளையும் வெளியிடுமாறு அவருக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுக்கிறேம்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பளத்துடன் டைரக்டராகும்படி கேட்டதற்கு அத்தொழிலாளி மறுத்துவிட்டாராம்! அவர் ஒரு நாள்கூட வேலைக்கு வரத் தவறியதில்லையாம். நிர்வாகிகளும், தொழிலாளரும் சரி எண்ணிக்கையுடன் கூடிய ஒரு கூட்டு சபை நியமித்து அவ்வப்பொழுது கம்பெனி அபிவிருத்தி, க்ஷேமநலன் இவற்றைப்பற்றிக் கலந்துயோசிப்பது நல்ல பலனைத் தருமென்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

* * *

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே, அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே ஒட்டுவித்தால் ஆரொருவரோடாதாரே, உருகுவித்தால் ஆரொருவருருகாதாரே, பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே, பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே, காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே, காண்பாரார், கண்ணுதலாய்க் காட்டாக்காலே.

—திருநாவுக்கரசர்.

## பாப்பாண்டவருக்கு குருஷ்சேவ் வாழ்த்து

வத்திக்கான், மார்ச் 10

பரிசுத்த பாப்பரசருக்கு சோவியத் பிரதமர் குருஷ்சேவ் அனுப்பியுள்ள ஒரு வாழ்த்துச் செய்தியில், உலக சமாதானத்தை நிலைநாட்டும் பணியில், பல்லாண்டு வாழ்ந்து செயலாற்றவேண்டும் எனக் கூறியுள்ளார்.

## நகரசுத்தி தொழிலாளர் வீடமைப்பு

### பாராமுகம் என கெனமன் கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழரின் விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் போராடுகிறேம் என்பவர்கள் தமிழ்த் தொழிலாளர்களாகிய ஸ்தலஸ்தாபன நகரசுத்தித் தொழிலாளரது வீடமைப்புத் திட்டம் பற்றி பாராமுகமாக இருப்பது விந்தையாக உள்ளது, என்று கொழும்பு மத்திய தொகுதி எம். பி. திரு. பீட்டர்கெனமன் நேற்றுகாலை நகரசுத்தித் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; நகரசுத்தித் தொழிலாளர்கள் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைந்திருப்பதைப் பாராட்டியதுடன் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் வரை ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நகரசுத்தித் தொழிலாளரின் பிரச்னைகளை நேர்முகமாக பரிசீலனை செய்து அவை பற்றி யாழ்ப்பாணம் மாநகரசபைக் கமிஷனருடன் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி திரு. தா. சண்முகதாசன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகத் தெரிகிறது.

# மந்திரிகளுக்கு . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. உண்மையில் நிலைமை மோசமாகவே போய்க்கொண்டிருக்கிறது. தமிழ்மக்களின் தலைவர் என்று கூறிக்கொண்டவர்களின் தவருன கொள்கைகள் காரணமாக தமிழ் மக்களிடம் இருந்த உரிமைகளும் பறிபோயின. இந்த நிலைமையில் தமிழ் மக்கள் விமோசனம்பெற வேண்டுமாயின் அவர்களுக்கு வழிகாட்ட புதியசக்திவேண்டும். இதுதான் வாலிபர்களுடைய சக்தி இவ்வளவுகாலமும் தமிழ்மக்கள் கடைப்பிடித்துவந்த தனிப்பட்டபாதையை விட்டு அகன்று சிங்கள மக்கள் மத்தியில் முற்போக்கு சக்திகளுடன் ஒன்று படுவதன் மூலமாகவே தமிழ் மக்களுக்கு விமோசனம் பிறக்கமுடியும் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே அவர்களை வேற்றுமைப்படுத்தக் கூடிய பல விஷயங்கள் இருக்கின்றன ஆனல் அவற்றை நாம் பொருட்படுத்தக்கூடாது சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பொதுவான பிரச்னைகள் பல உள அவற்றில்சிரத்தை எடுக்க வேண்டும்.

சீனியின் விலையை உயர்த்தினுலும் விவசாயிகளின் கூப்பன் அரிசியை வெட்டினுலும் அது சிங்களவர்களையும் தமிழர்களையும் பாதிக்கக்கூடிய விஷயமாகும் இதனை எதிர்த்து அனைவரும் போராடவேண்டும். அண்மையில் இ. போ. ச. ஊழியர் வேறுபாடின்றிப் போராடினர் ஒற்றுமைப்பாதையையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறேம். இனத்துவேஷ கொள்கையை கைவிட்டு இடதுசாரி இயக்கத்தின் கீழ் ஒன்றுபடவேண்டும்.

**தலைமையுரை**

திரு. வ. பொன்னம்பலம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

"இனப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை போன்ற பிரச்சனைகள் தேசத்தில் உள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுடன் சம முக்கியத்துவம் பெற்றவை இலங்கையில் இனத்துவேஷமும் பகைமையும் வளர அடிப்படைக் காரணம் பற்றுக்குறையே. பொருளாதார முன்னேற்றமும் அபிவிருத்தியும் ஏற்பட்டால் பகைமை அகலும். சகோதரத்துவம் மிளிரும். பற்றுக்குறை பகைமையின் தாய். எனவே நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்க திட்டமிட்ட சோஷலிஸ அமைப்பு வேண்டும். இவற்றைச் சாதிக்க ஒரேவழி இடதுசாரி ஐக்கியமே. சோஷலிஸ அமைப்பு ஒன்றுதான் இன சமத்துவத்தை வழங்கும். இடதுசாரி ஐக்கியத்தின் மூலம் சோஷலிஸ அமைப்பை நாம் காணமுடியும். உண்மையான இன விடுதலைக்கு இடதுசாரி ஐக்கியம் அவசியம். இடதுசாரி ஐக்கிய தலைமையின் கீழ்த்தான் தமிழினம் இந்நாட்டில் விடுதலை பெறமுடியும். எனவே இதுவரை தமிழினம் பின்பற்றி வந்த வேண்டாத வகுப்புவாதக் கொள்கைகளை விட்டு புதிய தலைமையை இடதுசாரி ஐக்கியத்திற்கு ஊடாகக் காணவேண்டும.

நாவலர், சோமசுந்தரப்புலவர், சேர். பொன். அருணசலம், இராமநாதன் போன்ரேர் வகுத்தவழியில் தமிழர்களை வழி நடத்த இடதுசாரிகளான நாம் விரும்புகிறேம்."

இலங்கை கம்யூனிஸ்ட், மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கச் சம்மேளனப் பொதுக் காரியதரிசி திரு. டபிள்யு. ஏ தர்மதாசா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சில ஸ்தாபனங்கள் தமிழ் மக்களைத் தவருன பாதையில் இழுத்துச்செல்லும் முயற்சி தோல்வியடைந்துவிட்டது என்பதை இம் மகாநாடு குறிக்கிறது. இதேபோன்று சிங்கள மக்களிடையேயும் சிங்கள மக்களைத் தவருன பாதையில் வழி நடத்திவந்த சக்திகள் படு தோல்வியடைந்துள்ளன. இதற்குக் காரணம் சிங்கள தமிழ் மக்களிடையே சரியான அரசியல் அறிவு வளர்ந்திருப்பதே. இன்று வாலிபர் தங்கள் சரியான பாதை ஐக்கிய ஜனநாயக இலங்கையை உருவாக்குவதே என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இதை உணர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கங்களின் சம்மேளனம் வாலிபர்களை வழிகாட்டி முன்னடத்திச்செல்ல ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.

நாங்கள் ஸ்ரீ லங்கா அரசாங்கத்துக்கு கூறுவது என்னவெனில், "நீங்கள் இன்று அமெரிக்க எண்ணைக் கம்பெனிகளுக்கு எதிராக எடுத்த உறுதியான நடவடிக்கைகளைப் போன்று மற்றைய பிரச்சினைகளிலும் உறுதியாக நிற்க வேண்டுமென்பதே. நீங்கள் அந்நிய ஏகாதிபத்தியத்துக்கும், இந்நாட்டுப் பிற்போக்குச் சதிகளுக்கும் எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் அத்தனைக்கும் கம்யூனிஸ்ட் வாலிபர்கள் அனைவரும் எங்கள் பூரண ஒத்துழைப்பைத் தருவோமென உறுதியளிக்கிறேம்" என்பதே.

திரு. சரத் முத்தட்டுகம பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"உலகிலுள்ள காலனி நாடுகளில் நாளுக்குநாள் தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ந்து வருகிறது. ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஏகாதிபத்தியம் தனது அந்திய நிலையிலிருக்கிறது. அநேக நாடுகள் ஏற்கனவே சுதந்திரம் பெற்றுவிட்டன. கியூபா நாடு சோஷலிசத்தை நோக்கி வீரப் போராட்டம் நடத்துகிறது.

இலங்கையில் பிற்போக்குவாதிகள் மீண்டும் பதவிக்கு வர சகலவழியிலும் முயற்சிக்கிருர்கள். ஆனல்முன்னேற்ற சக்திகள் அவர்களை வெற்றிகொண்டுவிட்டன. உண்மையான தேசியமுன்னேற்றத்திற்கு பூர்வாங்கமாக தமிழ், சிங்கள இளைஞர்கள் எங்கள் கொள்கையின்கீழ் ஒன்றுதிரண்டு வருகிருர்கள். எதிர்காலம் எங்களுக்குச் சொந்தமானது. இறுதி வெற்றி எமதே."

## தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணி கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணி நிர்வாகக்கூட்டம் திரு. ம. ச. சுந்தரலிங்கம் தலைமையில் கூடியது.

எதிர்வரும் 30-3-63-ல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் பொதுக் கூட்டம் ஒன்றை நிகழ்த்துவதற்கு இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் அரசியலில் முழு மூச்சுடன் தலைமைதாங்க வேண்டுமென்னும் பிரேரணை நிறைவேற்றப் பட்டது.

இக் கூட்டத்தில் இடம்பெற வேண்டிய நிகழ்ச்சிகளுக்கான நடவடிக்கைகளையும், திட்டங்களையும்பற்றி ஆலோசிக்கப்பட்டது.

## வள்ளுவர் தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

திருவள்ளுவர் தினம் இன்று நாவலர் பாடசாலை உட்பட, மற்றும் பல இடங்களிலும் கொண்டாடப்படுகிறது.


இப்பொழுது நடைபெறுகிறது

வீர காவியம் !!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) திவொலி (நுவரேலியா) ஜெமினி (ருகலை) ஸ்ரீகிருஷ்ண (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

மனேகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், சரோஜா தேவி
நடித்த
'பாலும் பழமும்'


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ந் திகதி, அச்சிட்டு வெளியிடப்பட்டது.